

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

-சமூக சீர்திருத்த மாத இதழ்-


THIRU QURAN NARCHEYDHI MALAR - 2018 FEBRUARY

மலர்: 11 இதழ் : 5 பிப்ரவரி 2018 விலை: ரூ. 5


## இறைத்தூதர்களுக்கு நன்றி சொல்வோம்

## ஒன்றே குலம் ஒருவனே இறைவன்!
## அனைத்து தூதர்களும் நம்மவரே!
## அனைவரையும் நேசிப்போம்!




மெய்யாகவே நாம் ஒவ்வொரு சமூகத்தாரிடத்திலும், "இறைவனையே நீங்கள் வணங்குங்கள் ஷைத்தான்களை விட்டும் நீங்கள் விலகிச் செல்லுங்கள்" என்று (போதிக்குமாறு) நம் துதர்களை அனுப்பி வைத்தோம். எனவே அவர்களில் இறைவன் நேர்வழி காட்டியோரும் இருக்கிறார்கள் வழிகேடே விதிக்கப் பெற்றோரும் அவர்களில் இருக்கிறார்கள் ஆகவே நீங்கள் பூமியில் சுற்றுப்பயணம் செய்து, பொய்யர்களின் முடிவு என்ன ஆயிற்று என்பதைக் கவனியுங்கள். (திருக்குர்ஆன் 16:36)



## இவற்றில் நிரந்தரமாக வாழ நினைத்த மனிதர்கள் எங்கே இப்போது?

● மேலும், பள்ளத்தாக்கில் பாறைகளைக் குடைந்த ஸமூத் சமுதாயத்தாருடனும் மேலும், முளைகளையுடைய ஃபிர்அவ்னுடனும் (உம்முடைய இறைவன் எவ்வாறு நடந்துகொண்டான் என்பதை நீர் கவனிக்கவில்லையா?) அந்த மக்களோ உலக நாடுகளில் வரம்புமீறிய செயல்களில் ஈடுபட்டிருந்தார்கள் அங்கு பெரும் குழப்பத்தை விளைவித்திருந்தார்கள். இறுதியில், அவர்கள் மீது உம் இறைவன் தண்டனையின் சாட்டைகளைப் பொழிந்தான். உண்மையில், உம் இறைவன் குறிவைத்துக் காத்துக் கொண்டிருக்கின்றான். (திருக்குர்ஆன் 89: 9– 14)



அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய

அல்லாஹ்வின் திருப்பெயரால்...

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

# THIRU QURAN NARCHEYDHI MALAR

**மலர்: 11 இதழ் : 5 பிப்ரவரி 2018 விலை: ரூ. 5**

## பொருளடக்கம்

இறைத்தூதர்களுக்கு நன்றி சொல்வோம்! -2
இறைத்தூதர்களுக்கும் நமக்கும் என்ன தொடர்பு? -3
இதுதான் இஸ்லாம் -5
இறைத்தூதின் உயிர் மூச்சு ஏகத்துவம்! -6
ஏகத்துவத்திற்கு சான்று பகரும் முற்கால புனித நூல்கள் -8
பலதெய்வ வழிபாட்டை கண்டிக்கும் புனித நூல்கள் -10
மறுமை கொள்கை முற்கால புனித நூல்களில் -12
அனைத்தும் நமதே அனைவரும் நம்மவரே -14
இறைத்தூதர்கள்- சிறுகுறிப்புகள் -15
எம்மதமும் சம்மதமாகுமா இறைவனிடத்தில்? -18
யாரைத்தான் பின்பற்றுவது? -21

**வாசகர்கள் கவனத்திற்கு...**

- இவ்விதழைப் பெறவிரும்பும் அன்பர்கள் தங்களது தெளிவான விலாசத்தை **9886001357** என்ற எண்ணுக்கு **SMS** அனுப்பவேண்டும்.
- மாற்று மத அன்பர்களுக்கு இவ்விதழ் ஒரு வருடம் வரை அன்பளிப்பாக அனுப்பி வைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்பினால் அவர்கள் **SMS** மூலம் **RESEND QNM** என்று டைப் செய்து அனுப்பவேண்டும். சந்தா அனுப்பத் தேவையில்லை.
- முஸ்லிம் அன்பர்களுக்கு 4 மாதம் வரை இவ்விதழ் இலவசமாக அனுப்பிவைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்புவோர் சந்தா அனுப்ப வேண்டும்.
- ஈராண்டு சந்தா **Rs.120-**
- இதழ் மொத்தமாக வேண்டுவோர், சந்தாதாரர்கள் குறைபாடுகள் தொடர்பு எண்: **08867971835**

Published from:

**House of Peace,**

PO Box no. 1726, No.501, 3rd cross, Syed Block,
AS palya Bangalore 560017

**Ph. 9886001357 email: amkasim@yahoo.com**

# இறைத்தூதர்களுக்கு நன்றி சொல்வோம்!

இக்குறுகிய வாழ்வை மனிதர்களுக்கு ஒரு பரீட்சையாகவும் இவ்வுலகை அதற்கான பரீட்சைக் கூடமாகவும் படைத்துள்ள இறைவன் மக்கள் அதர்மத்தின்பால் எவ்வளவுதான் வரம்புமீறிச் சென்றாலும் அங்கு மீண்டும் தர்மத்தை நிலைநாட்டுவதற்காக அவ்வப்போது தன் தூதர்களை நியமிக்கிறான். அவ்வாறு அதர்மம் அவ்வப்போது கட்டுப்படுத்தப் படாமல் விடப்பட்டிருந்தால் என்ன ஆகியிருக்கும் என்பதை ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள்.

இறைவன் நினைத்திருந்தால் அப்படியே நம்மை கலவரங்களுக்கும் குழப்பங்களுக்கும் இடையே விட்டிருக்கலாம். அவனை கேட்பதற்கு யாரும் இல்லை. ஆனால் அவன் தன் கருணையினால் மீண்டும் மீண்டும் தர்மத்தை நிலைநாட்டுவதற்காக மனிதர்களுள் புனிதர்களை தேர்ந்தெடுத்து அவர்கள் மூலம் தனது தர்மத்தை நிலைநாட்டுகிறான். அதற்காக நாம் நம் இறைவனுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். தர்மத்தை நிலைநாட்டும் பணியில் தங்கள் உயிரைத் துச்சமாகக் கருதி தியாகங்கள் பல மேற்கொண்டு இறைவனின் மார்க்கம் பூமியில் நிலைபெற வேண்டும் என்பதற்காக இரவுபகலாக உழைத்த அந்த உத்தமர்களுக்கும் நாம் நன்றிக்கடன் பட்டுள்ளோம். பூமியில் இத்தனை கலகங்களுக்கும் குழப்பங்களுக்கும் மத்தியிலும் ஆங்காங்கே ஓரளவாவது தர்மமும் நன்மைகளும் எஞ்சியிருப்பதாகக் காண்பீர்கள் ஆனால் அதற்கு அந்த புனிதர்கள் மேற்கொண்ட தியாகங்களும் முக்கிய காரணமே. பூமியின் எந்த மூலைக்கு அவர்கள் வந்திருந்தாலும் சரியே. நாம் அவர்கள் அனைவரையும் நன்றி உணர்வோடு நினைத்து நாம் அந்த சான்றோர்களுக்காக பிரார்த்திக்கவேண்டும். எல்லாம்வல்ல இறைவன் அவர்கள் அனைவர் மீதும் அருளும் சாந்தியும் நல்குவானாக. மறுமையில் அந்த சான்றோருடன் வாழும் பாக்கியத்தை நம் அனைவருக்கும் தருவானாக.

பூமியில் தர்மத்தை நிலைநாட்டுவதற்காக வந்த அந்த நல்லோர்கள் இறைவனின் செய்திகளை தத்தமது மக்களுக்கு எடுத்துரைத்தார்கள். இறைவனின் பார்வையில் பாவம் எது புண்ணியம் எது என்பதை மக்களுக்கு எடுத்துரைத்ததோடு அந்த மக்களிடையே ஒரு சிறந்த முன்மாதிரிப் புருஷர்களாக வாழ்ந்தும் காட்டினார்கள்.

பிரச்சாரத்தின்போது ஆதரவாளர்களையும் பெற்றார்கள். மூர்க்கமான எதிரிகளையும் சித்திரவதைகளையும் சந்தித்தார்கள். பல்வேறு விதமான சோதனைகளையும் சந்தித்தார்கள். இறைவன் தன்னோடு துணை நிற்கிறான் என்ற தன்னம்பிக்கையோடும் பொறுமை மேற்கொண்டும் அனைத்தையும் எதிர்கொண்டார்கள். இறுதியில் அனைத்தையும் வென்று தர்மத்தை ஆங்காங்கே நிலைநாட்டினார்கள். இதுவரை 1,24,000 இறைத்தூதர்கள் இப்பூமியின் வெவ்வேறு பாகங்களுக்கு வந்து சென்றுள்ளனர் என்று இறுதி இறைத்தூதர் முஹம்மது நபிகள்(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

# இறைத்தூதர்களுக்கும் நமக்கும் என்ன தொடர்பு?

இன்று நாம் அவசியம் பதில் காண வேண்டிய கேள்விகள் சில உள்ளன:

- இறைத்ததூதர்களுக்கும் நமக்கும் என்ன தொடர்பு?
- இவர்களை புறக்கணித்து நாம் நம் மனம்போன போக்கில் வாழமுடியுமா?
- இவர்களில் யாரை வேண்டுமானாலும் பின்பற்றலாமா?

முதலாவதாக இவ்வாழ்க்கை என்பது தற்காலிகமானது, இறைவனால் நடத்தப்படும் பரீட்சை போன்றது என்பதை நாம் உணர்ந்தால், அடுத்ததாக நாம் செய்ய வேண்டியது இந்த பரீட்சையில் நாம் எப்படி வெற்றி பெறுவது என்பதை ஆராய்ந்து அறிய வேண்டும். இதில் அலட்சியம் காட்டினால் நாம் மறுமையில் நிரந்தரமாக நரகத்தில் வாழ வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாவோம். அப்படியானால் அந்நரகத்தை தவிர்த்து சொர்க்கத்தில் பிரவேசிக்க என்ன வழி? ஒரே ஒரு வழிதான் உண்டு! ஆம் அது அந்த இறைவனே காட்டித் தரும் வழி!

## இறைவன் தருவதே நேர்வழி!

இன்றைய காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் நமக்காக அருளப்பட்ட இறைவேதத்தையும் நமக்காக அனுப்பப்பட்ட இறைத்ததூதரையும் பின்பற்றுவது ஒன்று மட்டுமே மோட்சத்துக்கு உரிய வழியாகும்! இது அல்லாத எந்த வழியும் நமக்கு மோட்சத்தைப் பெற்றுத்தருமா? தராது என்பது தெளிவான உண்மை! காரணம் இவ்வுலகுக்கு சொந்தக்காரன் இறைவன். இவ்வுலகுக்கும் இவ்வுலகில் காணப்படும் அனைத்துக்கும் நம் புலன்களுக்கு எட்டும் அல்லது எட்டாத அனைத்துக்கும் கடந்த காலங்களுக்கும் நிகழ்காலம், எதிர்காலங்களுக்கும் உரிமையாளன் அவன் ஒருவன் மட்டுமே! இம்மையும் மறுமையும் இறுதித் தீர்ப்பு நாளும் அவனுக்கே உரியன! இதோ அவ்விறைவனே தன் இறுதி மறையில் கூறுகிறான்:

- **“நேர்வழியைக் காண்பித்தல் நிச்சயமாக நம் மீது இருக்கிறது. அன்றியும் பிந்தியதும் (மறுமையும்) முந்தியதும் (இம்மையும்) நம்முடையவையே ஆகும்“ (திருக்குர்ஆன் 92:12-13)**

அவனைத்தவிர வேறு இறைவன் இல்லை என்பது தெளிவானபின் வேறு வழிகளில் மோட்சம் கிடைக்க வழி இல்லை என்பது உறுதியாகிறது.

இப்போது நம் முன் எழும் கேள்வி- இன்று பலரும்

- எங்கள் வழிதான் நேர்வழி,
- எங்கள் மூதாதையர் வழிதான் நேர்வழி,
- நாங்கள் பின்பற்றி வருவதுதான் இறைவழி
- எங்கள் இனத்தாருக்கும் இறைத்தூதர்கள் வந்துள்ளார்கள். அவர்கள் வழியே எங்களுக்குப் போதும்,

என்றெல்லாம் கூறிக்கொண்டிருக்கும்போது, அந்த உண்மை வேதத்தையும் உண்மைத் தூதரையும் நாம் எப்படி அறிந்து கொள்வது?

வாருங்கள் சிந்தித்து அறிவோம்!

## உண்மை உண்மையே!

நம் மனிதகுலம் என்பது ஒன்றே ஒன்று! நாம் எங்கு வாழ்ந்த போதும எம்மொழியைப் பேசினாலும் எவ்வினத்தைச் சேர்ந்தோரானாலும் ஒரு தாய் ஒரு தந்தையில் இருந்து உருவாகிப் பல்கிப் பெருகி பரவியவர்களே. நாம் அனைவரும் ஒரே குடும்பத்தின் அங்கங்களே என்பதையும் நம் இறைவன் ஒரே இறைவனே எனபதையும் நாம் மறந்து விடக்கூடாது. இதை யார் மறந்தாலும் மறுத்தாலும் உண்மை உண்மையே! இன்றைய நவீன விஞ்ஞானமுமம இவ்வுண்மையை மெய்ப்பித்து நிற்கிறது.

நம் மனித குடும்பத்தை நேர்வழி நடத்த அவ்வப்போது நம் மூதாதையார்களிடையே தனது தூதர்களை அனுப்பினான் இறைவன். ஆக, அவர்கள் எந்த பூமியில் எக்காலத்தில் வந்திருந்தாலும் அனைவரும் நம்மவரே! அனுப்பப்பட்ட வேதங்கள் அனைத்துமே நமது வேதங்களே! இங்கு உங்கள் வேதம் எங்கள் வேதம் என்றோ அல்லது உங்கள் தூதர் எங்கள் தூதர் என்றோ பிரிவினை கொண்டாட துளியும் இடம் இல்லை!

ஒரே போதனை

அவர்கள் அனைவரும் தத்தமது மக்களை நோக்கி "இறைவன் ஒருவனையே வணங்குங்கள். அவனுக்கு கீழ்ப்படிந்து வாழுங்கள். அவ்வாறு கீழ்படிந்து வாழ்ந்தால் இவ்வுலகிலும் அமைதி காண்பீர்கள். அதற்குப் பரிசாக மறுமையில் சொர்க்கத்தை அவன் வழங்குவான். கீழ்ப்படியாமல் தான்தோன்றித்தனமாக நடந்தால் இவ்வுலகிலும் அமைதியின்மை காண்பீர்கள். மறுமையில் நரக தண்டனையும் உங்களுக்குக் காத்திருக்கிறது." என்று போதித்தார்கள். அந்தந்த மக்களிடையே முன்மாதிரிகளாக நின்று அவர்களுக்கு வழிகாட்டினார்கள். ஆங்காங்கே தர்மத்தையும் நிலைநாட்டினார்கள்.

## ஆனால் என்ன நடந்தது?

காலப்போக்கில் தூதுர்களின் மறைவுக்குப் பின் ஷைத்தானின் தூண்டுதலின் பெயரில் பிற்கால மக்கள் அந்த இறைத்தூதர்களுக்கு நினைவுச்சின்னங்கள் எழுப்பினார்கள். 'படைத்த இறைவனை மட்டுமே வணங்கி வாழுங்கள்' என்று போதித்த அந்த இறைத்தூதர்களுக்கே உருவச்சிலைகளை அமைத்து அவற்றையே கடவுளாக பாவித்து வணங்க ஆரம்பித்தார்கள். இவ்வாறு உண்மை இறைவனைப்பற்றிய கண்ணிய உணர்வு (seriousness) சிதைக்கப்பட்டதன் காரணமாக அலட்சிய மனோபாவம் உருவெடுத்தது. தொடர்ந்து பாவங்கள் பெருகின, இனத்துக்கு ஒன்று ஊருக்கு ஒன்று என்று கடவுளர்களின் எண்ணிக்கையும் பெருகிய காரணத்தால் ஜாதிகளும் பிரிவினைகளும் கலகங்களும் பல்கிப் பெருகின. இவ்வாறு அதர்மம் தலை தூக்கும்போதெல்லாம் மீண்டும் தர்மத்தை நிலைநாட்ட மீண்டும்மீண்டும் தூதர்கள் அனுப்பப் பட்டனர். இவர்களில் இறுதியாக வந்தவரே முஹம்மது நபி(ஸல்) அவர்கள்.

● **(ஆரம்பத்தில்) மனிதர்கள் ஒரே கூட்டத்தினராகவே இருந்தனர் அல்லாஹ் (நல்லோருக்கு) நன்மாராயங் கூறுவோராகவும், (தீயோருக்கு) அச்சமூட்டி எச்சரிக்கை செய்வோராகவும் நபிமார்களை அனுப்பி வைத்தான்**

**அத்துடன் மனிதர்களிடையே ஏற்படும் கருத்து வேறுபாடுகளைத் தீர்த்து வைப்பதற்காக அவர்களுடன் உண்மையுடைய வேதத்தையும் இறக்கி வைத்தான் எனினும் அவ்வேதம் கொடுக்கப் பெற்றவர்கள், தெளிவான ஆதாரங்கள் வந்த பின்னரும், தம்மிடையே உண்டான பொறாமை காரணமாக மாறுபட்டார்கள் ஆயினும் அல்லாஹ் அவர்கள் மாறுபட்டுப் புறக்கணித்துவிட்ட உண்மையின் பக்கம் செல்லுமாறு நம்பிக்கை கொண்டோருக்குத் தன் அருளினால் நேர் வழி காட்டினான் இவ்வாறே, அல்லாஹ் தான் நாடியோரை நேர்வழியில் செலுத்துகின்றான்.(திருக்குர்ஆன் 2:213)**

(அல்லாஹ் என்றால் வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன் என்று பொருள்)

எனவே இன்று மோட்சம் அடைய விரும்புவோர் முக்கியமாக கவனிக்கவேண்டிய விடயங்கள் இவையே:

- ஒன்றே குலம் ஒருவன் மட்டுமே இறைவன். அவனல்லாது வணக்கத்திற்கு தகுதியான யாரும் இல்லை. இறைவனை அவன் கற்பிக்கும் வண்ணம் வணங்கவேண்டும்.
- அனைத்து இறைத்தூதர்களையும் பேதபாவமின்றி ஏற்றுக் கொள்ள வேண்டும். அவர்களுக்கிடையே வேற்றுமை கற்பிக்கக் கூடாது.
- ஆனால் அந்தந்த காலகட்டத்து மக்கள் அவரவர்களுக்கு அனுப்பப்பட்ட தூதரையும் வேதத்தையும் பின்பற்றி வாழ்வதே மோட்சத்திற்கு உரிய வழியாகும். காலாவதியான வேதங்களையும் சிதைந்துபோய் இறைத்தன்மையை இழந்துபோன வேதங்களையும் பின்பற்றுவது இறைவனின் உண்மையான வழிகாட்டுதலைப் புறக்கணிப்பதற்கு சமமாகும்.

# இதுதான் இஸ்லாம்

- **நற்செயல் என்பது உங்களுடைய முகங்களைக் கிழக்கு நோக்கியோ மேற்கு நோக்கியோ திருப்புவதல்ல! மாறாக அல்லாஹ்வையும், இறுதி நாளையும், வானவர்களையும், வேதங்களையும், இறைத்தூதர்களையும் ஒருவன் முழுமையாக நம்புவதும் மேலும் (அல்லாஹ்வின் மீதுள்ள நேசத்தின் காரணமாகத்) தமக்கு விருப்பமான பொருளை உறவினர்களுக்கும், அநாதைகளுக்கும், வறியவர்களுக்கும், வழிப்போக்கருக்கும், யாசிப்போருக்கும், அடிமைகளை மீட்பதற்கும் வழங்குவதும், மேலும் தொழுகையை நிலைநாட்டி, ஜகாத்தைக் கொடுத்து வருவதுமே நற்செயல்களாகும். மேலும், வாக்குறுதி அளித்தால் தம் வாக்குறுதிகளை நிறைவேற்றுபவர்களும், வறுமை மற்றும் துன்பங்களின் போதும் சத்தியத்திற்கும், அசத்தியத்திற்கும் நடக்கும் போராட்டத்தின் போதும் பொறுமையுடன் நிலைத்து இருப்பவர்களுமே புண்ணியவான்கள் ஆவர்! இவர்களே உண்மையாளர்கள் மேலும் இவர்களே இறையச்ச முடையவர்கள். (திருக்குர்ஆன் 2:177)**

(அல்லாஹ் என்றால் ‘வணக்கத்திற்குரிய ஒரே இறைவன்’ என்பது பொருள).

# இறைத்தூதின் உயிர் மூச்சு ஏகத்துவம்!

தொன்று தொட்டு இப்பூமிக்கு வந்த இறைத்தூதர்கள் அனைவரும் ஏக இறைவன் ஒருவனையே வழிபட வேண்டும், அவனை விடுத்து மற்றவற்றை வணங்குவது மாபெரும் பாவம் என்பதை அழுத்தம் திருத்தமாக வலியுறுத்தி வந்துள்ளார்கள்

- **(நபியே!) உமக்கு முன்னர் நாம் அனுப்பிய ஒவ்வொரு தூதரிடமும் “நிச்சயமாக (வணக்கத்திற்குரிய) நாயன் என்னைத் தவிர வேறு எவருமில்லை எனவே, என்னையே நீங்கள் வணங்குங்கள்“ என்று நாம் வஹீ (இறை வெளிப்பாடு) அறிவிக்காமலில்லை. (திருக்குர்ஆன் 21:25)**

கண்டிப்பாக இறைவன் எந்த முரண்பாடுகளையும் கற்பிக்க மாட்டான் என்பதையும் இறைத்தூதர்களும் ஒருவருக்கு ஒருவர் முரண்பட மாட்டார்கள் என்பதையும் நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். இன்று முரண்பாடுகளாக ஏதாவது தென்பட்டால் அவை பிற்காலங்களில் ஒருசில குழப்பவாதிகளும் இடைத்தரகர்களும் அரசியல் சக்திகளும் மதத்தின் பெயரால் மக்களைச் சுரண்ட நுழைத்தவை என்பதும் தெளிவு.

## தர்மத்தை நிலைநாட்ட அடித்தளம்

இறைவனின் ஏகத்துவத்தை போதிப்பதே இறைத்தூதர்களின் அடிப்படைப் பணியாக இருந்தது. ஏனெனில் இதுதான் பூமியில் தர்மத்தை நிலைப் நாட்டுவதற்கான அடித்தளம். மனிதன் பாவங்களில் இருந்து விலகி இருக்க வேண்டுமானால் கடவுளைப் பற்றிய முறையான எண்ணமும் நம்பிக்கையும் அவனுள் விதைக்கப்பட வேண்டும். அந்த எல்லாம் வல்ல இறைவன் என்னைக் கண்காணிக்கிறான், நான் குற்றம் செய்தால் அவன் என்னை தண்டிப்பான் என்ற உணர்வு அவனுள் சதா இருக்க வேண்டும்.

அந்த அடிப்படையில் இந்த பூமிக்கு வந்த இறைத்தூதர்கள் அனைவரும் தத்தமது மக்களுக்கு கீழ்கண்டவாறு கடவுள் கொள்கையை போதித்தார்கள்:

- இவ்வுலகைப் படைத்து பரிபாலித்து வரும் இறைவன் ஒரே ஒருவனே. அவன் மட்டுமே உங்கள் வணக்கத்துக்கும் பிரார்த்தனைக்கும் உரியவன்.

- அவனை நேரடியாக வணங்க வேண்டும். அவனுக்கு இடைத்தரகர்கள் தேவை இல்லை. சடங்கு சம்பிரதாயங்களும் தேவை இல்லை.

- அவனுக்கு ஓவியங்களோ உருவங்களோ சமைக்ககூடாது ஏனெனில் அவனைப்போல் எதுவுமே இல்லை.

- நாங்கள் அவனுடைய தூதர்கள் மட்டுமே. அவனுக்கு பதிலாக எங்களையோ எங்கள் சமாதிகளையோ உருவங்களையோ வணங்கக் கூடாது.

- படைத்தவனுக்கு பதிலாக படைப்பினங்களையோ உருவங்களையோ நீங்கள் வணங்குவீர்களாயின் உங்களுக்குள் பிரிவினைகளும் குழப்பங்களும் ஏற்படும்.

என்றெல்லாம் போதித்தார்கள். திருக்குர்ஆனில் இருந்து முன்னாள் இறைத்தூதர்களில் சிலரது உதாரணங்களை கீழே காண்கிறோம்:

- **7:59. திண்ணமாக, நாம் நூஹை அவருடைய சமூகத்தாரிடம் அனுப்பினோம். அவர் கூறினார்: "என்னுடைய சமுதாயத்தவரே! அல்லாஹ்வுக்கு அடிபணியுங்கள்! அவனைத் தவிர வேறு இறைவன் உங்களுக்கில்லை. மகத்தானதொரு நாளின் வேதனை உங்கள் மீது வந்து விடுமோ என்று நான் அஞ்சுகின்றேன்."**
- **29:16. மேலும், இப்ராஹீமை நாம் அனுப்பினோம். அப்போது அவர் தம்முடைய சமூகத்தாரிடம் கூறினார்: "அல்லாஹ்வுக்கு அடிபணியுங்கள். மேலும், அவனுக்கு அஞ்சுங்கள். நீங்கள் அறிந்துகொள்வீர்களாயின், இதுவே உங்களுக்குச் சிறந்ததாகும்.**
- **7:65. மேலும், 'ஆத்' கூட்டத்தாரிடம் அவர்களுடைய சகோதரர் ஹூதை நாம் அனுப்பினோம். அவர் கூறினார்: "என் சமுதாயத்தாரே! அல்லாஹ்வுக்கு அடிபணியுங்கள்! அவனைத் தவிர உங்களுக்கு வேறு இறைவன் இல்லை எனவே, நீங்கள் தவறான நடத்தையிலிருந்து விலகிக்கொள்ள மாட்டீர்களா?"**
- **7:73. மேலும், ஸமூத் கூட்டத்தாரிடம் அவர்களின் சகோதரர் ஸாலிஹை நாம் அனுப்பினோம். அவர் கூறினார்: "என் சமுதாயத்தார்களே! அல்லாஹ்வுக்கு அடிபணியுங்கள். அவனைத் தவிர உங்களுக்கு வேறு இறைவன் இல்லை. உங்கள் இறைவனிடமிருந்து தெளிவான சான்று உங்களிடம் வந்துவிட்டது. இது அல்லாஹ்வின் ஒட்டகம் இது உங்களுக்கு ஒரு சான்றாக உள்ளது. எனவே, அல்லாஹ்வின் பூமியில் மேய்ந்து திரிய இதனை விட்டு விடுங்கள்! இதற்கு எந்தத் தீங்கும் செய்யாதீர்கள்! அவ்வாறு செய்வீர்களாயின் துன்புறுத்தும் வேதனை உங்களைப் பிடித்துக் கொள்ளும்.**

இவ்வாறு இறைவனை மட்டுமே வணங்கவேண்டும் என்பதை எடுத்துரைத்த அவர்கள் அந்த மக்கள் செய்துகொண்டிருந்த தவறுகளைப் பற்றி எச்சரித்தார்கள். மக்களோடு மக்களாக வாழ்ந்து இறைவனின் போதனைகளின் படி பாவ புண்ணியங்கள் எவை என்பவற்றை கற்பித்தது மட்டுமல்லாமல் முன்மாதிரி புருஷர்களாகவும் வாழ்ந்து காட்டினார்கள். நாளடைவில் தர்மத்தையும் நிலைநாட்டினார்கள். ஆனால் இறைத்தூதர்களின் மறைவுக்குப் பிறகு பிற்கால மக்கள் மெல்லமெல்ல இக்கட்டளைகளை மீறினார்கள். ஷைத்தானின் தூண்டுதலால் இறைத்தூதர்களின் நினைவுக்காக அவர்களுக்கு உருவப் படங்களை வைக்க ஆரம்பித்தார்கள். நாளடைவில் அவற்றைச் சிலைகளாக வடித்து பின்னர் அவற்றை வழிபட ஆரம்பித்தார்கள். உண்மை இறைவனை மறந்தார்கள்! அதன் விளைவு?.....இறையச்சம் மக்களில் இருந்து அகல அகல, இடைத்தரகர்களும் மூடநம்பிக்கைகளும் பெருகப் பெருக...... கடவுளின் பெயராலேயே சுரண்டல்களும் அக்கிரமங்களும் நடந்தேறின. இவ்வாறு பூமியில் அதர்மம் பரவிப் படர்ந்தது..

Printed, published &edited by A.Mohamed Kasim on behalf of House of Peace, No.501, 3rd cross, Syed Block, AS palya, Bangalore 560017 and printed at Print-O- Graph, Balaji complex, Sultanpet, Bangalore.
Registered News paper in India No. KARTAM/2007/28173

# ஏகத்துவத்திற்கு சான்று பகரும் முற்கால புனித நூல்கள்

*இறைவன் ஒருவனே என்பது பற்றியும் அவனது தன்மைகள் பற்றியும் இதோ திருக்குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது:*

**● நபியே நீர் கூறுவீராக! "அல்லாஹ் அவன் ஒருவனே. அவன் தேவைகள் ஏதும் இல்லாதவன். அவன் எவரையும் பெற்றெடுக்கவில்லை அவனையும் யாரும் பெற்றெடுக்கவில்லை. அன்றியும் அவனைப்போல் எவரும் எதுவும் இல்லை." (திருக்குர்ஆன் 112: 1-4)**

**● அவனே அல்லாஹ், வணக்கத்திற்குரியவன், அவனைத் தவிர வேறு நாயன் இல்லை, மறைவானதையும், பகிரங்கமானதையும் அறிபவன், அவனே அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன். அவனே அல்லாஹ், வணக்கத்திற்குரிய நாயன் அவனைத் தவர, வேறு யாரும் இல்லை, அவனே பேரரசன், மிகப்பரிசுத்தமானவன், சாந்தியளிப்பவன், தஞ்சமளிப்பவன், பாதுகாப்பவன், (யாவரையும்) மிகைப்பவன், அடக்கியாள்பவன், பெருமைக்குரித்தானவன் - அவர்கள் இணைவைப்பவற்றை யெல்லாம் விட்டு அல்லாஹ் மிகத் தூய்மையானவன். அவன்தான் அல்லாஹ் படைப்பவன், ஒழுங்குபடுத்தி உண்டாக்குபவன், உருவமளிப்பவன் - அவனுக்கு அழகிய திருநாமங்கள் இருக்கின்றன, வானங்களிலும், பூமியிலும் உள்ளவையாவும் அவனையே துதி செய்கின்றன - அவனே (யாவரையும்) மிகைத்தவன் ஞானம் மிக்கவன். (திருக்குர்ஆன் 59:22-24)**

*இன்று இறுதிவேதம் திருக்குர்ஆன் வலியுறுத்துவது போலவே இறைவனின் முந்தைய வேதங்கள் என்றும் புனித நூல்கள் என்றும் மக்களால் பரவலாக நம்பப்படும் நூல்களிலும் இவ்வுண்மை வலியுறுத்தப் படுவதைக் காணலாம்.*

**● ஏகம் ஏவாதித்யம் (அவன் ஒருவனே, அவனுக்குப் பிறகு எவருமில்லை) - சாந்தோக்ய உபநிஷத்-** Chandogya Upanishad> Chapter 6, Section 2, Verse 1

**● நா சாஸ்ய கஸ்சி ஜனித ந கதிபா (அவனுக்கு மேல் பெற்றோர்களோ கடவுளோ இல்லை) - ஸ்வேதஸ்வதாரா உபநிஷத் -** Svetasvatara Upanishad, Chapter 6, Verse 9

**● நா சாஸ்ய கஸ்சி ஜனித ந கதிபா (அவனுக்கு மேல் பெற்றோர்களோ கடவுளோ இல்லை) - நாதஸ்ய ப்ரதிம அஸ்தி ( அவனைப்போல் எதுவுமில்லை) - ஸ்வேதஸ்வதாரா உபநிஷத் மற்றும் யஜூர் வேதம்-** Svetasvatara Upanishad, Chapter 4, Verse 19 & Yajurveda, Chapter 32, Verse 3

**● யா ஏக இத்தமுஸ்துஹி (நிகரில்லாதவனும் தனித்தவனும் ஆகிய அவனைத் துதிப்பீராக) - ரிக் வேதம்-** Rigveda, Book No VI, Hymn 45, Verse 16



**● மேலும், "ஏகம் ஸத்வம் பஹூதா கல்பயந்தி" (இறைவன் ஒருவன்தான், அவனை ஞானிகள் பல பெயரிட்டு அழைக்கிறார்கள். - ரிக் வேதம் (1:164:46)** -Rigveda, Book No.1, Hymn No. 164, Verse 46

“லாயிலாஹா இல்லல்லாஹ்“ என்பது இஸ்லாத்தின் மூலமந்திரம்-

வணக்கத்துக்கு உரியவன் இறைவனைத் தவிர வேறு யாருமில்லை“ என்பது இதன் பொருள்.

● **ஏகம் பிரஹம் தவித்யே நாஸ்தே நஹ்னே நாஸ்தே கின்ஜன். (பிரம்ம சூத்திரம்)**

பொருள்: இறைவன் ஒருவனே வேறு இல்லை. இல்லவே இல்லை

# பைபிளில் இறை ஏகத்துவம்

## பைபிளின் பழைய ஏற்பாடு: -

கர்த்தரே மெய்யான தெய்வம். அவர் ஜீவனுள்ள தேவன். நித்திய ராஜா. அவருடைய கோபத்தினால் பூமி அதிரும். அவருடைய உக்கிரத்தை ஜாதிகள் சகிக்க மாட்டார்கள். (பழைய ஏற்பாடு - எரேமியா 10:10)

● “இஸ்ரவேலே, கேள்: நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்” (உபாகமம் 6:4)



● “நானே அவரென்று நீங்கள் உணர்ந்து, என்னை அறிந்து விசுவாசிக்கும்படிக்கு நீங்களும் நான் தெரிந்துகொண்ட என் தாசனும் எனக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் எனக்கு முன் ஏற்பட்ட தேவன் இல்லை, எனக்குப்பின் இருப்பதும் இல்லை. நான், நானே கர்த்தர் என்னையல்லாமல் ரட்சகர் இல்லை” (ஏசாயா 43:10-11)

● “நான் முந்தினவரும், நான் பிந்தினவருந்தானே் என்னைத்தவிர தேவன் இல்லையென்று, இஸ்ரவேலின் ராஜாவாகிய கர்த்தரும், சேனைகளின் கர்த்தராகிய அவனுடைய மீட்பரும் சொல்லுகிறார்” (ஏசாயா 44:6)

## பைபிளின் புதிய ஏற்பாடு:

● “அப்பொழுது ஒருவன் வந்து, அவரை நோக்கி: நல்ல போதகரே நித்திய ஜீவனை அடையும்படி நான் எந்த நன்மையைச் செய்யவேண்டும் என்று கேட்டான் அதற்கு அவர்: நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? தேவன் ஒருவரைத்தவிர நல்லவன் ஒருவனும் இல்லையே” (மத்தேயு 19:16-17)

● “ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசுகிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்” (யோவான் 17:3)

● “அப்பொழுது இயேசு: அப்பாலே போ சாத்தானே் உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார்” (மத்தேயு 4:10)

● “இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: கற்பனைகளிலெல்லாம் பிரதான கற்பனை எதுவென்றால்: இஸ்ரவேலே கேள், நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்” (மாற்கு 12:29)

● “தேவன் ஒருவரே தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே” (ஐ தீமோத்தேயு 2:5)

## தமிழில் ..

● *தனக்குவமை இல்லாதான் தாள் பணிந்தோர்க்கல்லால்*

*மனக்கவலை மாற்றல் அரிது என்ற திருக்குறளும் "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற திருமந்திரத்தின் வாசகமும் இறை ஏகத்துவத்தை எடுத்தோதுவது நாமறிந்ததே!*

# பலதெய்வ வழிபாட்டை கண்டிக்கும் புனித நூல்கள்

*இவ்வுலகைப் படைத்து பரிபாலித்து வரும் இறைவனைக் குறிக்கும் அரபுமொழிச் சொல்லே 'அல்லாஹ்' என்பது. அந்த இறைவனை விடுத்து அவன் அல்லாதவற்றை வணங்கும் செயலைப் பற்றி இறுதிவேதம் திருக்குர்ஆன் கூறுகிறது:*

**● "நீங்கள் அழைக்கும் அல்லாஹ் அல்லாதவற்றை கவனித்தீர்களா? பூமியிலுள்ள எதையாவது அவை படைத்துள்ளனவா அல்லது அவற்றுக்கு வானங்களில் ஏதாவது பங்கு உண்டா? என்பதை எனக்குக் காண்பியுங்கள்! நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால், இதற்கு, முன்னேயுள்ள ஒரு வேதத்தையோ அல்லது (முன்னோர்களின்) அறிவு ஞானங்களில் மிஞ்சிய ஏதேனும் பகுதியையோ (உங்கள் கூற்றுக்கு ஆதாரமாக) என்னிடம் கொண்டு வாருங்கள்!" என்று (நபியே!) நீர் கூறுவீராக. (திருக்குர்ஆன் : 46:4)**

## அல்லாஹ்வுக்கு இணையாக்கப்படுபவற்றின் பலவீனம்!

**● மனிதர்களே! ஓர் உதாரணம் சொல்லப்படுகிறது. எனவே செவிதாழ்த்திக் கேளுங்கள். நிச்சயமாக அல்லாஹ்வையன்றி (வேறு) எவர்களை நீங்கள் பிரார்த்திக்கின்றீர்களோ, அவர்களெல்லாம் ஒன்று சேர்ந்தாலும் ஓர் ஈயைக்கூடப் படைக்க முடியாது இன்னும், அவர்களிடமிருந்து ஒரு பொருளை எடுத்துக் கொண்டு போனால் அவர்களால் அதனை அந்த ஈயிடத்திலிருந்து திரும்பக் கைப்பற்றவும் முடியாது தேடுவோனும், தேடப்படுவோனும் பலவீனர்களே. (திருக்குர்ஆன் 22:73)**

## இடைத் தரகர்களுக்கு இடமில்லை

**● தங்களுக்கு (யாதொரு) நன்மையோ தீமையோ செய்ய இயலாத அல்லாஹ் அல்லாதவற்றை (இணைவைப்பாளர்கள்) வணங்குகிறார்கள் இன்னும் அவர்கள் "இவை எங்களுக்கு அல்லாஹ்விடம் மன்றாட்டம் செய்பவை" என்றும் கூறுகிறார்கள் அதற்கு நீர் "வானங்களிலோ பூமியிலோ அல்லாஹ் அறியாதவை (இருக்கின்றன என எண்ணிக் கொண்டு) நீங்கள் அவனுக்கு அறிவிக்கின்றீர்களா? அவன் மிகவும் பரிசுத்தமானவன். அவர்கள் இணைவைப்பவற்றை விட மிகவும் உயர்ந்தவன்" என்று கூறும். (திருக்குர்ஆன் 10:18)**

## இணைவைப்போருக்கு தண்டனை நிரந்தர நரகம்

**● அல்லாஹ்வுக்கு இணை கற்பிப்போருக்கு சொர்க்கத்தை அல்லாஹ் விலக்கப்பட்டதாக ஆக்கி விட்டான். அவர்கள் சென்றடையும் இடம் நரகம். அநீதி இழைத்தோருக்கு எந்த உதவியாளர்களும் இல்லை. (திருக்குர்ஆன் 5:72)**

## முற்கால புனித நூல்களில்...

*இறுதி வேதத்தில் சொல்லப்பட்டவாறே மக்களால் வேதங்களாகவும் புனித நூல்களாகவும் மதிக்கப்படுபவற்றில் இறைவனுக்கு இணைவைத்தல் வன்மையாகக் கண்டிக்கப்படுவவதை நாம் காணலாம்.*

**•யாருடைய அறிவு உலகாசையால் களவாடப்படுகிறதோ அவர்களே போலி**

தெய்வங்களை வணங்குகிறார்கள். (பகவத் கீதை )

- அந்தம் தமஹ பிரவிசந்தி யா அசம்பூதி முபாசதே - (பொருள்: யார் இயற்கை வஸ்த்துக்களைகாற்று நீர், நெருப்பு போன்றவை) வணங்குகிறார்களோ அவர்கள் அறியப்படாத இருளில் மூழ்குகின்றனர்.) - யஜுர்வேதம் Yajurveda, Chapter 40, Verse 9 –
- "யார் மனிதர்களால் படைக்கப்பட்ட பொருட்களை (மேஜை,நாற்காலி, சிலைகள் போன்றவை) வணங்குகிரார்களோ அவர்கள் இன்னும் ஆழமான இருளில் மூழ்குகின்றனர்" என்று தொடர்ந்து கூறுகிறது யஜூர் வேதம்

### பைபிளின் கூற்று:

*பழைய ஏற்பாட்டில்...*

- எகிப்து தேசம்! அடிமைத்தள வீடாகிய எகிப்து தேசத்தில் இருந்து உங்களை பிறப்படப் பண்ணிய கர்த்தராகிய நானே தேவன். என்னையல்லாது வேறு ரட்சகனில்லை. மேலே வானத்திலேயும், கீழே பூமியிலேயும், பூமியின் கீழ் தண்ணீரிலேயும் கர்த்தருக்கு இணையாக யாதொரு சொரூபத்தையும், யாதொரு விக்ரகத்தையும் நீர் எடுத்துக் கொள்ள வேண்டாம். கர்த்தர் அதை வெறுக்கிறார் என்று கூறுகிறது. , (யாத்திராகாமம் 1 - 5)
- "ஒருவராய், சாவாமையுள்ளவரும், சேரக்கூடாத ஒளியில் வாசம்பண்ணுகிறவரும், மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக்கூடாதவருமாயிருக்கிறவர் அவருக்கே கணமும் நித்திய வல்லமையும் உண்டாயிருப்பதாக. ஆமென்" (தீமோத்தேயு 6:16)

புதிய ஏற்பாட்டில்...

- அந்நாளில் (நீதி விசாரணை நாளில்) அநேகர் என்னை நோக்கி "கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலேயே தீர்க்க தரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலேயே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்போது நான் (ஏசு) ஒருக்காலும் உங்களை அறியவில்லை அக்கிரமச் செய்கையாரே! என்னைவிட்டு அகன்றுபோங்கள்" என்று அவர்களுக்குச் சொல்வேன். (மத்தேயு 7:21)

தொன்று தொட்டு இப்பூமிக்கு வந்த இறைத்தூதர்கள் ஏக இறைவன் ஒருவனையே வழிபட வேண்டும், அவனை விடுத்து மற்றவற்றை வணங்குவது மாபெரும் பாவம் என்பதை அழுத்தம் திருத்தமாக வலியுறுத்தி வந்துள்ளார்கள் என்பதை மேற்படி ஆதாரங்களில் இருந்து அறியலாம்.

# வாசகர் எண்ணம்

விஞ்ஞானம் போதித்துக் கொண்டிருக்கிற இறைமறையாம் உலகப் பொதுமறையாம் மனித இயல்பு எதார்த்தத்தின் திருமறையாம் திருக்குர்ஆனின் வசனங்களை நமது திருக்குர்ஆனின் நற்செய்திமலர் தொகுத்து தந்து கொண்டிருப்பது அருமையிலும் அருமை அதை பெறுவதற்கு 30 நாட்கள் பொறுக்க வேண்டியதுள்ளதே என்பதுதான் சற்று வருத்தமாக உள்ளது. மாத இதழான திருக்குர் ஆன் நற்செய்தி மலரை ஏன் வார இதழாக ஆக்கக் கூடாது,

**-வி.எம். என். கஷீப், தும்கூரு.2**

# மறுமை கொள்கை முற்கால புனித நூல்களில்..

நபிகள் நாயகத்திற்கு முன்னர் இவ்வுலகுக்கு வந்த இறைத்தூதர்கள் அனைவரும் எவ்வாறு இறைவன் ஒருவனே எனும் ஏகத்துவத்தையே போதித்துள்ளார்கள் என்பதை முன்சென்ற கட்டுரைகளில் கண்டோம். அதே போலவே மரணத்திற்குப் பின் விசாரணையும் மறுமை வாழ்வும் சொர்க்கமும் நரகமும் உள்ளது என்பதையும் போதித்துள்ளார்கள். இன்று மக்களால் புனித நூல்கள் என்றும் வேதங்கள் என்றும் மதிக்கப்படுபவற்றில் இதன் சுவடுகளைக் காணமுடிகிறது. வெவ்வேறு காலகட்டங்களில் பூமியின் வெவ்வேறு பகுதிகளில் வாழ்ந்த மக்ககளுக்கு இடையே எந்த தகவல் தொடர்புக்கும் சாத்தியமில்லாத நிலையில் இவ்வாறு இறைகொள்கை ஒருமித்த ஓரிறைக் கொள்கையும் ஒருமித்த மறுமைக் கொள்கையும் போதிக்கப்பட்டு இருப்பது இறைவனின் உள்ளமையையும் அந்த ஏகனிடமிருந்தே இறைத்தூதர்கள் அனைவரும் வந்திருக்கவேண்டும் எனும் உண்மையையும் உறுதிப் படுத்துகின்றன.

மரணத்திற்குப் பின் உள்ள மறுமை வாழ்வு பற்றி திருக்குர்ஆனில் இடம்பெற்றுள்ள சில வசனங்களை முதலில் பார்ப்போம்.

**● ஒவ்வொருவரும் மரணத்தை சுவைக்கக் கூடியவர்களே நன்மை மற்றும் தீமையின் மூலம் பரீட்சித்துப் பார்ப்பதற்காக உங்களைச் சோதிப்போம். நம்மிடமே திரும்ப கொண்டு வரப் படுவீர்கள்.( குர்ஆன் 21 : 35)**

● பயபக்தி உடையவர்களுக்காக சொர்க்கம் சித்தப் படுத்தப் பட்டுள்ளது. (குர்ஆன் 3 : 133)

● மறுமையில் இவர்களை நோக்கி “நீங்கள் உங்கள் மனைவிமார்களுடன் மகிழ்ச்சியுடன் சுவனத்துக்குள் நுழைந்து விடுங்கள்” என்று கூறப்படும். (குர்ஆன் 43 : 70 )

● பயபக்தியுடையவர்களுக்கு வாக்களிக்கப்பட்டுள்ள சுவர்க்கத்தின் உதாரணமாவது: அதில் மாறுபடாத தெளிந்த நீரைக் கொண்ட ஆறுகளும், தன் சுவை மாறாத பாலாறுகளும், அருந்துவோருக்கு இன்பமளிக்கும் மது ரச ஆறுகளும், தெளிவான தேன் ஆறுகளும் இருக்கின்றன. இன்னும், அதில் அவர்களுக்கு எல்லா விதமான கனிவகைகளும், தங்கள் இறைவனின் மன்னிப்பும் உண்டு. (இத்தகையோர்) நரகத்தின் எவன் என்றென்றுமே தங்கியிருந்து, கொதிக்கும் நீர் புகட்டப்பட்டு (அதனால்) குடல்களெல்லாம் துண்டு துண்டாகிவிடுமோ அவனுக்கு ஒப்பாவாரா? (குர்ஆன் 47 : 15)

● யார் நம் வேதவசனங்களை நிராகரிக்கிறார்களோ, அவர்களை நாம் நிச்சயமாக நரகத்தில் புகுத்தி விடுவோம். அவர்கள் தோல்கள் கருகிவிடும் போதெல்லாம் அவையல்லா (வேறு) தோல்களை அவர்கள் வேதனையைப் (பூரணமாக) அனுபவிப்பதற்கென, அவர்களுக்கு நாம் மாற்றிக் கொண்டே இருப்போம் - நிச்சயமாக அல்லாஹ் மிகைத்தவனாகவும் ஞானமுள்ளவனாகவும் இருக்கின்றான். குர்ஆன் 4:56

● (நரக) நெருப்பு அவர்களுடைய முகங்களை கரிக்கும் இன்னும் அதில் அவர்கள் உதடு சுருண்டு (முகம் விகாரமானவர்களாக) இருப்பார்கள். (குர்ஆன் 23:104)

● (நபியே!) இன்னும் நீர் கூறுவீராக: “இந்தச் சத்திய (வேதம்) உங்கள் இறைவனிடமிருந்து (வந்து)ள்ளது ஆகவே விரும்புபவர் (அதனை) நம்பி கொள்ளட்டும். விரும்புபவர் (அதனை) நிராகரிக்கட்டும். அநியாயக்

**காரர்களுக்கு (நரக) நெருப்பை நிச்சயமாக நாம் சித்தப்படுத்தியுள்ளோம். (அந்நெருப்பின்) சுவர் அவர்களைச் சூழ்ந்து கொள்ளும். அவர்கள் (தண்ணீர் கேட்டு) இரட்சிக்கத் தேடினால் உருக்கப்பட்ட செம்பு போன்ற தண்ணீரைக் கொண்டே இரட்சிக்கப்படுவார்கள். (அவர்களுடைய) முகங்களை அது சுட்டுக் கருக்கி விடும். மிகக் கேடான பானமாகும் அது! இன்னும் இறங்கும் தலத்தில் அதுவே மிகக் கெட்டதாகும்.(குர்ஆன் 18:29)**

## இந்து மத நூல்களில் சொர்க்கம்- நரகம்

● 'ஏ அக்னி! இறந்த இந்த மனிதர் மறு உலகிற்கு செல்வார்

' (ரிக் வேதம் 10 : 16 : 5 )

● ஏ கணவன் மனைவியரே! நீங்கள் ஒற்றுமையாய் நல்லறங்கள் செய்யத் துவங்குங்கள். சொர்க்க வாழ்க்கையை உண்மையில் அனுபவிப்பீர்கள். (அதர்வண வேதம் 6 : 122 : 3)

● சுவனத்தில் வெண்ணெய் வழிந்தோடும் ஓடைகளும் சேமித்து வைக்கப் பட்ட தேனும் இன்னும் பழ ரசங்கள் பால் தயிர் நீர் எல்லாம் கைக்கெட்டும் தூரத்தில் கிடைக்கும் வகையில் சதா சிற்றாறுகளாய ஓடிக் கொண்டிருக்கும். அவைகள் உன்னுடைய மகிழ்ச்சியை அதிகப் படுத்தும். ஏரியில் நிரம்பிக் கிடக்கும் தாமரை மலர்கள் உன்னுடைய ஆத்மாவை வலிமைப் படுத்தும். (அதர்வண வேதம் 4 : 34 : 6)

● யார் பெரும் பாவியாக, பொய்யனாக, நம்பிக்கையற்றவனாக இருந்தானோ அவன் நரகாஸ்தனத்தில் (நரகத்தில்) இருப்பான். (ரிக் வேதம் 4 : 5 : 5)

● நரகத்தில் நுழைந்தவுடன் தாங்க முடியாத வேதனை துவங்கும். கை கால்கள் எரிக்கப் படும். விறகுக் கட்டுகள் அவனைச் சுற்றி குவித்து வைக்கப் பட்டு எரிக்கப் படும். அவனுடைய சதை அவனுக்கு உண்ண கொடுக்கப்படும். தன்னைத் தானே செதுக்கிக் கொள்வான் அல்லது பிறரால் வெட்டப் படுவான். குடல்கள் பிதுங்கி வெளியே தள்ளப் பட்டவனாக இருப்பான். எனினும் அவன் உயிருடனே இருப்பான். அவன் சாகாது தொடர்ந்து வேதனையை அனுபவித்துக் கொண்டே இருப்பான். — ஸ்ரீமத் பாகவத் மஹா புராணம்

## பைபிளில் சொர்க்கம்- நரகம்

● பைபிள் பரலோக ராஜ்ஜியம் என்று சிறப்பித்துக் கூறுவது சொர்க்கத்தையே என்பதை அறிவோம்.

● 'நீதியின் பொருட்டுத் துன்புறுத்தப்படுவோர் பேறுபெற்றோர் ஏனெனில் விண்ணரசு (பரலோக ராஜ்ஜியம்) அவர்களுக்குரியது' (மத்தேயு 5:10)

● 'நீர் உமது தூய உறைவிடமாகிய விண்ணிலிருந்து கண்ணோக்கி, நீர் எங்கள் மூதாதையருக்கு ஆணையிட்டுக் கூறியபடி உம் மக்களாகிய எங்களுக்கும் எங்களுக்குக் கொடுத்துள்ள பாலும் தேனும் வழிந்தோடும் நாட்டுக்கும் ஆசிவழங்குவீராக!' ( இணைச் சட்டம் 26:15)

● உன் வலது கை உனக்கு இடறலுண்டாக்கினால், அதைத் தறித்து எறிந்து போடு உன் சரீரம் முழுவதும் நரகத்தில் தள்ளப்படுவதைப் பார்க்கிலும், உன் அவயவங்களில் ஒன்று கெட்டுப்போவது உனக்கு நலமாயிருக்கும். (மத்தேயு 5:30)

● உன் கையாவது உன் காலாவது உனக்கு இடறலுண்டாக்கினால், அதைத் தறித்து எறிந்துபோடு நீ இரண்டு கையுடையவனாய், அல்லது இரண்டு

காலுடையவனாய் நித்திய அக்கினியிலே தள்ளப்படுவதைப்பார்க்கிலும், சப்பாணியாய், அல்லது ஊனனாய், நித்திய ஜீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும். (மத்தேயு 18:8)

● உன் கை உனக்கு இடறல் உண்டாக்கினால், அதைத் தறித்துப்போடு நீ இரண்டு கையுடையவனாய் அவியாத அக்கினியுள்ள நரகத்திலே போவதைப்பார்க்கிலும், ஊனனாய் ஜீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும். (மாற்கு 9:43)

● நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்..... தன் சகோதரனை வீணனென்று சொல்லுகிறவன் ஆலோசனை சங்கத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான் மூடனே என்று சொல்லுகிறவன் எரிநரகத்திற்கு ஏதுவாயிருப்பான். (மத்தேயு 5:22)

# அனைத்தும் நமதே அனைவரும் நம்மவரே

*வெவ்வேறு காலகட்டங்களில் இப்பூமியின் வெவ்வேறு பாகங்களுக்கு வந்து சென்ற அனைத்து இறைத்தூதர்களும் நம்மவரே, நமது மனிதகுலம் எனும் குடும்பத்துக்காக, நமது சகோதர சகோதரிகளை நேர்வழிப் படுத்த நமது இறைவனால் அனுப்பப்பட்ட சான்றோர் பெருமக்களே என்ற மனப்பாங்கோடு அவர்கள் அனைவரையும் மதிக்க வேண்டும். அவர்கள் அனைவரையும் நாம் ஏற்றே ஆகவேண்டும். அவர்கள் வேற்று நாட்டவர் அல்லது வேற்று மொழியினர் வேற்று காலத்தவர்கள் என்று கூறி புறக்கணிக்கவோ தரம் தாழ்த்தவோ இறைவிசுவாசிகளுக்கு அனுமதியில்லை,*

**● 2:285. இந்தத் தூதர் தம் இறைவனிடமிருந்து தமக்கு அருளப்பட்டதின் மீது நம்பிக்கை கொண்டுள்ளார். அவரை ஏற்றுக் கொண்டவர்களும் அந்த வழிகாட்டுதலின் மீது நம்பிக்கை கொண்டுள்ளனர். இவர்கள் அனைவரும் அல்லாஹ்வையும் அவனுடைய வானவர்களையும் அவனுடைய வேதங்களையும் மற்றும் அவனுடைய தூதர்களையும் நம்புகின்றனர். மேலும் “அல்லாஹ்வுடைய தூதர்கள் எவருக்கிடையிலும் நாங்கள் வேற்றுமை பாராட்டுவதில்லை” என்றும், “எங்கள் இறைவனே! நாங்கள் செவியேற்றோம் அடிபணிந்தோம். எங்கள் இறைவனே! நாங்கள் உன்னுடைய மன்னிப்பைக் கோருகிறோம். உன்னிடமே (நாங்கள்) திரும்பி வர வேண்டியிருக்கிறது” என்றும் கூறுகின்றனர்.**

## மறுப்பது வழிகேடு

*அவரவர் காலகட்டத்திற்கு அனுப்பப்பட்ட வேதத்தையும் தூதரையும் பின்பற்றவேண்டியது மக்கள் மீது கடமையாகும். ஆயினும் மற்றவற்றை தரக்குறைவாக எண்ணுவதும் மறுப்பதும் வழிகேடாகும்:*

**● 4:136. இறைநம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வின் மீதும் அவனுடைய தூதர் மீதும், அவன் தன்னுடைய தூதர் மீது இறக்கி அருளிய வேதத்தின் மீதும், இதற்கு முன்னால் அவன் இறக்கி வைத்த வேதங்கள் மீதும் நம்பிக்கை கொள்ளுங்கள். எவன் அல்லாஹ்வையும், அவனுடைய வானவர்களையும், அவனுடைய வேதங்களையும், அவனுடைய தூதர்களையும், மறுமைநாளையும் மறுக்கின்றானோ அவன் வழி கேட்டிலே உழன்று வெகுதூரம் சென்றுவிட்டான்.**

# இறைத்தூதர்கள்- சிறுகுறிப்புகள்

இதுவரை 1,24,000 இறைத்தூதர்கள் இப்பூமியின் வெவ்வேறு பாகங்களுக்கு வந்து சென்றுள்ளனர் என்பது இறுதி இறைத்தூதர் முஹம்மது நபி(ஸல்) அவர்களின் கூற்று. இறைவன் அனுப்பிய அனைத்து இறைத்தூதர்களிலும் நாம் நம்பிக்கை கொள்ள வேண்டும். ஒருவரையும் மறுப்பது கூடாது.

இறுதிவேதம் திருக்குர்ஆனில் மேற்கண்ட இறைத்தூதர்களில் 25 பேருடைய சத்திய போதனை தொடர்பான விடயங்கள் இடம்பெற்றுள்ளன. குர்ஆனில் பெயர் குறிப்பிடப்பட்ட இறைத்தூதர்கள் பற்றிய சிறு குறிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன:

**1.ஆதம் (அலை)**: உலகில் முதன்முதலாக படைக்கப்பட்ட மனிதர். இந்த உலகிற்கு இறைவனால் அனுப்பபட்ட முதல் இறைத்தூதர்.

(அலை- அலைஹிஸ்ஸலாம் என்பதன் சுருக்கம்- அவர் மீது இறைவனின் சாந்தி உண்டாவதாக என்பது பொருள்)

**2.இத்ரீஸ்(அலை):** இறைத்தூதர் நூஹ்(அலை) அவர்களின் முப்பாட்டனாரான இவர்கள் இறைத்தூதர் ஆதம் அவர்களுக்குப் பின்னால் வந்த நபியாவார்.

**3.நூஹ்(அலை):** ஆதித்தந்தை ஆதம் (அலை) அவர்களுக்குப்பின் வந்த இறைத்தூதர். இவர்கள் 950 ஆண்டுகள் வாழ்ந்தார்கள். இவர்கள் காலத்தில் ஏற்பட்ட வெள்ளப்பிரளயம் மிகப்பிரமாண்டமானது. அதில் அன்றுவரை வாழ்ந்த சத்திய மறுப்பாளர்கள் அழிக்கப் பட்டனர். பிரளயத்தில் இருந்து காப்பாற்றப்பட்ட சிறு தொகையினரின் மூலம் உண்டான சந்ததிகளே இன்று வாழும் மக்கள்.

**4. ஸாலிஹ் (அலை)**: இவர்கள் கி.மு 2430 இல் சவுதிய்யாவிலுள்ள அல்ஹிஜ்ர் என்னும் இடத்தில் வாழ்ந்த இறைத்தூதர். ஆடம்பர வாழ்வில் மூழ்கி, சிலைவணக்கத்தில் மாய்ந்து போய்க்கொண்டிருந்த "ஸமூத்" கூட்டத்தினரை சீர்படுத்த பாடுபட்டார்கள்.

**5. ஹூத்(அலை)**: கி.மு 2000 இல் வாழ்ந்த அரபு பழங்குடியின மக்களுக்கு இவர்கள் இறைத்தூதராக நியமிக்கப்பட்டார்கள். இப்பழங்குடி மக்கள் யமன் நாட்டில் கடலோரப்பகுதிகளில் வசித்து வந்தனர்.

**6. இப்றாஹீம்(அலை)**: இவர்கள் கி.மு 2000 வாக்கில் தென் இராக்கில் உள்ள "உர்"என்னும் ஊரில் பிறந்த இறைத்தூதர் ஆவார்கள். இவர்களுக்கு "இறை நம்பிக்கையாளர்களின் தந்தை" எனவும்,"இறைவனின் உற்ற நண்பர்" எனவும் சிறப்பு பெயர்கள் உண்டு. இறை ஆணைப்படி மக்காவில் அமைந்துள்ள க.்.பா ஆலயத்தை தன் மகனோடு சேர்ந்து புனர் நிர்மாணம் செய்தார்கள்.

**7. லூத் (அலை):**நபி இப்றாஹீம்(அலை) அவர்களின் சகோதரர் மகனான இவர்கள் ஜோர்தானில் உள்ள "ஸத்தூம்" என்னும் பகுதிக்கு இறைத்தூதராக நியமிக்கப்பட்டார்கள். ஓரினசேர்க்கையை எதிர்த்து பிரச்சாரம் செய்தவர்கள்.

**8. இஸ்மாயீல்(அலை):** கி.மு 19 ஆம் நூற்றாண்டை சேர்ந்த

இறைத்தூதரான இவர்கள் நபி இப்றாஹீம் - ஹாஜரா தம்பதிகளுக்கு மூத்த புதல்வராவார்கள். இவர்களிடம் இருந்து அரபு சந்ததிகள் தோன்றியதால் ”அரபிகளின் தந்தை” என்பர்.

**9.இஸ்ஹாக்(அலை):** இறைத்தூதரான இவர்கள் நபி இப்றாஹீம் - ஹாஜரா தம்பதிகளின் இளைய புதல்வராவார்கள். இவரின் மைந்தர்தான் யகூ·.ப் (அலை) அவர்கள். எனவேதான் இவர்களை ”இஸ்ராயீல்களின் தந்தை” என்று சொல்வர்.

**10. ய·.கூப்(அலை):** கி.மு 19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இவர்கள் இறைத்தூதர் இஸ்ஹாக்(அலை) அவர்களின் புதல்வர். இவர்களுக்கு 12 ஆண் பிள்ளைகள் இருந்தனர். இந்த 12 பேரின் வழித்தோன்றல்களே இஸ்ராயீல் சமூகத்தினர். ய·.கூப் (அலை) அவர்களின் மற்றுமொரு பெயரே இஸ்ராயீல். இதனால் இஸ்ரவேலர்களை பனீ இஸ்ராயீல் - இஸ்ராயீலின் மக்கள் என்பர்.

**11. யூசுப்(அலை)**: ய·.கூப் (அலை) அவர்களின் இளைய புதல்வரான இவர்கள் கி.மு 18 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இவர் பேரழகுக்கு சொந்தக்காரர். இவர்கள் எகிப்தின் அமைச்சராகவும், பின்னர் அரசராகவும் விளங்கினார்கள்.

**12.ஐயூப்(அலை):** நபி இப்றாஹீம்(அலை) அவர்களின் வழித்தோன்றல்களில் வந்தவர்.நபி யூசுப்(அலை) அவர்களுக்குப்பின் ,தென் பாலஸ்தீனுக்கும் ”அல் அகபா” வளைகுடாவுக்கும் மத்தியில் ”அத்வம்”பகுதி மக்களுக்கு இறைத்தூதராக நியமிக்கப்பட்டார்கள் என்று சொல்லப்படுகின்றது. இவர்கள் பொறுமைக்கு பெயர் போனவர்கள்.

**13.ஸுஐபு(அலை):** இவர்கள் நபி இப்றாஹீம்(அலை) அவர்களின் வழித்தொன்றல். வடமேற்கு சவூதியாவில் உள்ள மலைபிரதேசமான ”மத்யன்” பகுதிக்கும் ”அய்கா” என்னும் மற்றுமொரு பகுதிக்கும் இறைத்தூதராக நியமிக்கப்பட்டார்கள். ஓரிறைக் கொள்கையையும், வணிக நேர்மையையும் மக்களுக்கு வலியுறுத்தி பிரச்சாரம் செய்தார்கள்.

**14.மூஸா(அலை)** இவர்கள் கி.மு 14ஆம் நூற்றாண்டில் எகிப்தில் பிறந்தனர்.கொடுங்கோலன் இரண்டாம் ரம்சேஸ் (பிர்அவ்ன்) கொத்தடிமைகளாக நடத்தப்பட்ட இஸ்ராயீல் சமுதாயத்தை மீட்டார்கள். இவர்களுக்கு அல்லாஹ் ”தவ்ராத்” வேதத்தை அருளினான்.

**15.ஹாரூன்(அலை):** இறைத்தூதர் மூஸா(அலை) அவர்களின் சகோதரர். எகிப்தின் சர்வாதிகாரி இரண்டாம் ரம்சேஸை எதிர்த்துப் போரடுவதில் மூஸா (அலை) அவர்களுக்கு உறுதுணையாக இருந்தார்கள்.

**16. இல்யாஸ்(அலை):** கி மு 8ஆம் நூற்றாண்டு நபி ஹாரூன் (அலை) அவர்களின் வழித்தோன்றலில் வந்த ஒரு இறைத்தூதர். அன்றைய ஷாம் நாட்டு மக்களுக்கு இறைத்தூதராக நியமிக்கப்பட்டார்கள்.

**17. யூனுஸ்(அலை):** கி.மு 8ஆம் நூற்றாண்டில் இராக்கிலுள்ள ”நைனவா” பகுதிக்கு இவர்கள் இறைத்தூதராக நியமிக்கப்பட்டார்கள்.

**18. தாவூத்(அலை):** இறைத்தூதர் ய·.கூப்(அலை) அவர்களின்

வழித்தோன்றல் ஆவார்கள். இவர்களுக்கு "ஜபூர்" என்னும் வேதத்தை அல்லாஹ் அருளினான். இவர்கள் பாலஸ்தீன சர்வாதிகாரியான ஜாலூதை வீழ்த்தினார்கள்.

**19. சுலைமான்(அலை):** இறைத்தூதர் தாவூத் (அலை) அவர்களின் மைந்தரான இவர்கள் இறைத்தூதராகவும், பேரரசராகவும், விளங்கினார்கள். ஜெரூசலத்திலுள்ள புனித இறை இல்லமான பைத்துல் முகத்தஸை இறைக்கட்டளைக்கு இணங்க புதுப்பித்தார்கள். ஜின் இனமும், பறவை இனமும் இவர்களுக்கு வசப்படுத்திக் கொடுக்கப்பட்டிருந்தன.

**20.ஜகரிய்யா(அலை):** கி.மு முதலாம் நூற்றாண்டின் இறுதிக் கட்டத்தில் இஸ்ரவேலர்களுக்கு இறைத்தூதராக நியமிக்கப்பட்டார்கள். இறைத்தூதர் தாவூத்(அலை) அவர்களின் வழித்தோன்றலான இவர்கள் அன்னை மர்யமை வளர்த்தார்கள். இறைத்தூதர் யஹ்யா(அலை) அவர்கள் இவர்களின் புதல்வர் ஆவார்கள்.

**21.யஹ்யா(அலை):** கி.மு முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்த இவர்கள் ஜக்கரிய்யா(அலை) அவர்களின் புதல்வர். இவரை இஸ்ரவேலர்கள் படுகொலை செய்தனர்.

**22.ஈஸா(அலை):** இவர் கி.மு 4ஆம் ஆண்டில் பாலஸ்தீனத்தில் உள்ள நாஸிரா என்னும் ஊரில் மர்யம்(அலை) அவர்களுக்கு ஆண் துணையின்றி அற்புதமான முறையில் பிறந்தார்கள். இவருக்கு இஞ்ஜீல் வேதம் இறைவனால் அருளப்பட்டது.

**23. துல்கி∴ப்லு(அலை):**இறைத்தூதர்.

**24. அல்யஸவு(அலை):** இறைத்தூதர்.

**25. முஹம்மது(ஸல்):** இறுதித்தூதர் முஹம்மது(ஸல்) அவர்கள் ரபியுல் அவ்வல் மாதம் பிறை 12 (கி.பி 570) திங்கள்கிழமை திருமக்காவில் பிறந்தார்கள். இப்புவியில் 63ஆண்டு காலங்கள் வாழ்ந்து ஹிஜ்ரி 11ஆம் ஆண்டு ரபியுல் அவ்வல் மாதம் 12ஆம் நாள் (கி.பி 632) திங்கள் கிழமை இவ்வுலகை விட்டு மறைந்தார்கள். (நன்றி: http://allaaahuakbar.blogspot.in/)

# மனிதகுலத்தை உய்விக்க வந்த இறுதித்தூதர்

**எவர்கள் எழுதப்படிக்கத் தெரியாத நபியாகிய நம் தூதரைப் பின்பற்றுகிறார்களோ - அவர்கள் தங்களிடமுள்ள தவ்ராத்திலும் இன்ஜீலிலும் இவரைப் பற்றி எழுதப்பட்டிருப்பதைக் காண்பார்கள் அவர், அவர்களை நன்மையான காரியங்கள் செய்யுமாறு ஏவுவார் பாவமான காரியங்களிலிருந்து விலக்குவார் தூய்மையான ஆகாரங்களையே அவர்களுக்கு ஆகுமாக்குவார் கெட்டவற்றை அவர்களுக்குத் தடுத்து விடுவார் அவர்களுடைய பளுவான சுமைகளையும், அவர்கள் மீது இருந்த விலங்குகளையும், (கடினமான கட்டளைகளையும்) இறக்கிவிடுவார் எனவே எவர்கள் அவரை மெய்யாகவே நம்பி, அவரைக் கண்ணியப்படுத்தி, அவருக்கு உதவி செய்து, அவருடன் அருளப்பட்டிருக்கும் ஒளிமயமான (வேதத்)தையும் பின் பற்றுகிறார்களோ, அவர்கள் தாம் வெற்றி பெறுவார்கள். (திருக்குர்ஆன் 7:157)**

# எம்மதமும் சம்மதமாகுமா இறைவனிடத்தில்?

சிலருக்கு முன்னோர்கள் எம்மதமோ அம்மதமே நேர்மார்க்கம்!.... சிலருக்கு பெரும்பான்மை எம்மதமோ அம்மதமே நேர்மார்க்கம்!..... சிலருக்கு காதலியின் அல்லது காதலனின் மார்க்கம்... எஜமானனின் மார்க்கம்...... அல்லது எங்கு செல்வம் சேருமோ அம்மார்க்கம்... என பலவாறு தங்கள் மதத்தை அல்லது மார்க்கத்தை முடிவு செய்கின்றார்கள். இன்னும் சிலர் எதற்கு இந்த வம்பு? என்று கருதி எதையுமே பின்பற்றாதவர்களாகவும் உள்ளனர். இன்னும் சிலரோ கடவுளின் பெயரால் நடைபெறும் மோசடிகளையும் குழப்பங்களையும் கண்டு வெறுத்து நாத்திகத்தின்பால் ஒதுங்குகின்றனர்.

இவற்றில் எது சரி? எது தவறு? ஒன்றுக்கொன்று முரண்பட்ட இவை எல்லாமே சரியாகுமா? "எல்லா நதிகளும் கடலில்தானே கலக்கின்றன..... அதுபோல எல்லாவற்றுக்கும் முடிவு ஒன்றுதான்.... எனவே எம்மதமும் சம்மதமே" என்பது சிலரது கருத்து. "சரி, சாக்கடைகளும் கடலில்தானே சென்று கலக்கின்றன... எனவே சாக்கடைகளும் நதிகளும் ஒன்றாகுமா?" என்று இவர்களிடம் கேட்டால் பதிலில்லை! எனவே இது அறிவுக்கு ஒவ்வாத ஒரு உதாரணம் என்பதை அறியலாம்.

ஆக, எதுதான் சரியான மார்க்கம்? எப்படி இதைத் தேர்ந்தெடுப்பது?

இவ்வுலகின் சொந்தக்காரன் இதைப்பற்றி என்ன சொல்கிறான் என்பதை சற்று பாப்போம்:

● **ஆகவே நீர் உம்முகத்தை தூய மார்க்கத்தின் பக்கமே முற்றிலும் திருப்பி நிலைநிறுத்துவீராக! எதில் இறைவன் மனிதர்களைப் படைத்தானோ அதுவே அவனுடைய இயற்கை மார்க்கமாகும் இறைவனின் படைத்தலில் மாற்றம் இல்லை. அதுவே நிலையான மார்க்கமாகும். ஆனால் மனிதரில் பெரும்பாலோர் (இதை) அறியமாட்டார்கள். (திருக்குர்ஆன் 30:30)**

## இறைவனுக்கு கீழ்படியும் நிலை

ஆம், இவ்வுலகைப் படைத்து பரிபாலிப்பவன் எதை மார்க்கமாகக் கற்பிக்கிறானோ அதுவே அவன் ஒப்புக்கொள்ளும் மார்க்கமும் ஆகும். அதாவது அவனது கட்டளைகளுக்குக் கீழ்படிந்து வாழும் வாழ்க்கை நெறிதான் நேர்மார்க்கமாகும். இயற்கையில் நாம் காணும் சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், மரம, செடி, கோடி, விலங்கினங்கள், பறவைகள், மீனகள் என அனைத்துமே இறைவன் விதித்த விதிகளுக்குக் கட்டுப்பட்டு வாழ்கின்றன. அதுதான் இயற்கை மார்க்கமாகும்.

மனிதனும் பிறக்கும்போது இறைவனுக்குக் கீழ்படியும் நிலையில்தான் பிறக்கிறான். அவன் வளரவளர சிந்தனை விரியும்போதுதான் அதிலிருந்து மாறுபடுகிறான். தன் மார்க்கத்தைத் தேர்ந்தெடுக்கிறான்.

## எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான்...

நபிகள் நாயகம் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்.:

● 'ஒரு விலங்கு முழு வளர்ச்சி பெற்ற விலங்கைப் பெற்றெடுப்பதைப் போன்றே எல்லாக் குழந்தைகளும் இயற்கை மார்க்கத்திலேயே பிறக்கின்றன.

விலங்குகள் நாக்கு, மூக்கு வெட்டப்பட்ட நிலையில் பிறப்பதை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? (முழுமையான விலங்கை அங்கசேதப்படுத்துவது போல்) பெற்றோர்கள்தாம் குழந்தைகளை (இயற்கையான மார்க்கத்தை விட்டும் திருப்பி) யூதர்களாகவோ, கிறிஸ்தவர்களாகவோ, நெருப்பு வணங்கிகளாகவோ ஆக்கிவிடுகின்றனர்.' (நூல்: புகாரி)

அந்த கீழ்படியும் நிலைதான் இஸ்லாம் என்று அரபு மொழியில் அறியப்படுகிறது. அதுதான் இயற்கை மார்க்கமும் ஆகும். இவ்வுலகை ஒரு பரீட்சைக் கூடமாகப் படைத்து அதில் நமக்கு ஒரு தற்காலிக வாழவைக் கொடுத்து முடிவில் மறுமையில் நம் நன்னடத்தைக்குப் பரிசாக சொர்க்கத்தையும் தீய நடத்தைக்கு தண்டனையாக நரகத்தையும் வழங்க இருக்கிறான் நம் இறைவன்.

உண்மை இவ்வாறிருக்க நமது வாழ்க்கை நெறியைத் தேர்ந்தெடுப்பதில் அலட்சியம் காட்ட முடியுமா? அவன் படைத்த பூமியில் வாழ்ந்து கொண்டு அவனுக்குக் கீழ்ப்படியாமல் வாழ்வது முறையா? அவன் தன் தூதர்கள் மூலமாக காலாகாலமாக அனுப்பி வரும் மார்க்கத்தை புறக்கணித்துவிட்டு முன்னோர்களின் வழக்கங்களையும் இன்னபிற மார்க்கங்களையும் பின்பற்றினால் என்ன நடக்கும்? இதோ, அவனே தன் திருமறையில் தெளிவு படுத்துகிறான்:

● **"நிச்சயமாக இறைவனிடத்தில் (அங்கீகரிக்கப்பட்ட) மார்க்கம் இஸ்லாம்தான்..." (அல்குர்ஆன் 3:19)**

● **"இஸ்லாமைத் தவிர்த்து (வேறொரு) மார்க்கத்தை எவரேனும் விரும்பினால் நிச்சயமாக அவரிடமிருந்து (அது) அங்கீகரிக்கப்பட மாட்டாது. மறுமையில் அவர் நஷ்டமடைந்தவராகவே இருப்பார்" (அல்குர்ஆன் 3:85)**

மறுமையில் நஷ்டம் என்றால் என்ன? நரகம் அல்லாமல் வேறு என்ன?

நம்மைப் படைத்து நமக்கு நம் வழியைத் தேர்ந்தெடுக்கும் விருப்ப உரிமையையும் தந்த இறைவன் நமக்கு வழங்கும் அறிவுரை இதுதான்:.

● **நீங்கள் அவன் பக்கமே திரும்பியவர்களாக இருங்கள் அவனிடம் பயபக்தியுடன் நடந்து கொள்ளுங்கள் தொழுகையையும் நிலை நிறுத்துங்கள் இன்னும் இணைவைப்போரில் நீங்களும் ஆகி விடாதீர்கள். (திருக்குர்ஆன் 30:31 )**

அவன் தன் தூதர்கள் மூலமாகக் கற்றுத்தரும் வாழ்க்கை நெறியைப் பின்பற்றி வாழுங்கள். படைத்தவனை விட்டுவிட்டு படைப்பினங்களை வணங்கும் போக்கைக் கைவிடுங்கள்

● **எவர்கள் தங்கள் மார்க்கத்தில் பிரிவினைகளை உண்டாக்கி (பல) பிரிவுகளாகப் பிரிந்து விட்டனரோ (அவர்களில் ஆகி விட வேண்டாம். அவ்வாறு பிரிந்த) ஒவ்வொரு கூட்டத்தாரும் தங்களிடமிருப்பதைக் கொண்டே மகிழ்வடைகிறார்கள். (திருக்குர்ஆன் 30:32)**

இறைத்தூதரகள் அனைவரும் இஸ்லாம் என்ற இறைவனுக்குக் கீழ்படிதல் என்ற தூய்மையான மார்க்கத்தையே போதித்து வந்தார்கள். அவர்களின் மறைவுக்குப் பிறகு ஷைத்தானின் தூண்டுதலின் காரணமாக இடைத்தரகர்கள் புகுத்திய இணைவைப்பையும் மூடநம்பிக்கைகளையும் கடவுளை அடையும் வழி என்றும் மோட்சத்திற்கு உரிய மார்க்கம் என்றும் நம்பி ஏமாந்து விடாதீர்கள். பகுத்தறிவைப் பயன்படுத்தி உண்மையான

மார்க்கத்தைத் தேர்வு செய்து பின்பற்றுங்கள்.

### உங்கள் இறைவன் யார் என்பதை அறிய...

உங்கள் இறைவன் யார் என்று அறிவதில் குழப்பமா? உங்களுக்கு வாழ்க்கையில் ஒரு இக்கட்டான துன்பம் வந்தால் யாரை உதவிக்கு அழைப்பீர்கள் என்று சிந்தித்துப் பாருங்கள். உதாரணமாக நீங்கள் கடலிலோ, வானிலோ, பாலைவனத்திலோ பயணம் மேற்கொள்ளும்போது திடீரென ஒரு ஆபத்து வந்தால் நீங்கள் உங்கள் வீடுகளிலோ ஊரிலோ வணங்கி வந்த உங்கள் இஷ்ட தெய்வங்களையோ குலதெய்வங்களையோ அழைக்க மாட்டீர்கள்தானே! இக்கட்டான சூழலில் உங்கள் பார்வை வானை நோக்கியல்லவா உயர்கிறது? படைத்தவன் மட்டுமே இப்போது காப்பாற்ற முடியும் என்பதை உணர்கிறீர்கள் அல்லவா? அந்த உண்மை இறைவனையே எப்போதும் வணங்கி வாருங்கள்! அது மட்டுமே உங்களுக்கு பயன் அளிக்கும்.

- **மனிதர்களுக்கு சங்கடம் ஏற்பட்டால் அவர்கள் தங்கள் இறைவனிடம் முகம் திருப்பி (அதை நீக்கியருள) அவனிடம் பிரார்த்தனை செய்கிறார்கள் பிறகு அவன் அவர்களுக்கு தன்னிடமிருந்து அருளை சுவைக்கச் செய்தால் அவர்களில் ஒரு பிரிவினர் தம் இறைவனுக்கு இணை வைக்கின்றனர். (திருக்குர்ஆன் 30:33)**

- **நாம் அவர்களுக்கு அருளியதற்காக (நன்றி செலுத்தாமல்) அவர்கள் நிராகரித்துக் கொண்டிருக்கட்டும். நீங்கள் சுகமனுபவித்துக் கொண்டிருங்கள் விரைவில் (இதன் விளைவை) நீங்கள் அறிந்து கொள்வீர்கள். (திருக்குர்ஆன் 30:34)**

இறைவன் உங்கள் பிரார்த்தனையை ஏற்று உங்களை ஆபத்திலிருந்து காப்பாற்றிவிட்டால் அவனுக்கு நன்றிக்கடனாக அவனுக்குக் கீழ்படியும் போக்கைக் கைக்கொள்ளுங்கள். உங்கள் பாவங்களுக்காக மன்னிப்பு கோருங்கள். மாறாக செய்நன்றி மறந்து மீண்டும் போலி தெய்வங்களை வணங்க தலைப்பட்டீர்களானால் அதற்குரிய தண்டனை இம்மையிலும் உங்களை அடையலாம் மறுமையிலும் அடையலாம்!

இதோ மீண்டும் இறைவன் கேட்கிறான்:

- **இறைவனின் மார்க்கத்தைவிட்டு (வேறு மார்க்கத்தையா) அவர்கள் தேடுகிறார்கள்? வானங்களிலும் பூமியிலும் உள்ள (அனைத்துப் படைப்புகளும்) விரும்பியோ அல்லது வெறுத்தோ அவனுக்கே சரணடைகின்றன. மேலும் (அவை எல்லாம்) அவனிடமே மீண்டும் கொண்டு வரப்படும். (திருக்குர்ஆன் 3:83)**


**திருக்குர்ஆன் தமிழாக்கம் அன்பளிப்புப் பிரதி பெற விரும்பும் மாற்றுமத அன்பர்கள் கீழ்கண்ட எண்களில் தொடர்பு கொள்ளவும்:**

**சென்னை: 9941227866, 9894442844, 8122264467(மயிலாப்பூர்), 9840572018 (நுங்கம்பாக்கம்), 9840527687 (பல்லாவரம்), 9087836393(தாம்பரம்), ஓசூர்:9994713191 கிருஷ்ணகிரி: 9952862321 தர்மபுரி:9842627171 கோவை: 9600800050 திருப்பூர்:9150068919 குன்னூர்:9843622246 ஊட்டி:9543963412 ஈரோடு:7373947869, 9942958888 உடுமலை:9865051914 சேலம்:9994091364 திருச்சி:9865446344, 9442709087 மதுரை:9789341714 கும்பகோணம்:9597285160 விழுப்புரம்:9790290002 திருநெல்வேலி:9786230030 தென்காசி :9443695979 வேலூர்:9944656942 மயிலாடுதுறை:9942941190 திருவண்ணாமலை:9994564650, 9944905212 தூத்துக்குடி:8148059038 இளையான்குடி: 9842081210 ராஜபாளையம்:7845033616 ராமநாதபுரம்:7418140634 பாம்பன்:9043758656 கே.ஜி.எ.ஃ.ப்:9845217262**

# யாரைத்தான் பின்பற்றுவது?

இறைத்தூதர்களின் வரிசையில் நம் மூதாதையருக்கு அனுப்பப் பட்டவர்களும் அடங்குவர், நம் நாட்டினருக்கு, நம் மொழியினருக்கு அனுப்பப்பட்டவர்களும் அடங்குவர். வேற்று நாட்டினருக்கு, வேற்று மொழியினருக்கு அனுப்பப்பட்டவர்களும் அடங்குவர். ஒரே கொள்கையையே அவர்கள் போதித்து இருந்தாலும் அந்தந்த காலகட்டங்களில் மக்களின் மனமுதிர்ச்சிக்கும் சூழ்நிலைகளுக்கும் ஏற்றவாறு நடைமுறைச் சட்டங்களும் வணக்க வழிபாட்டு முறைகளும் அந்தந்த இறைத்தூதர்களால் போதிக்கப் பட்டன. இன்று வாழும் நாம் மறுமையில் வெற்றி அடைய வேண்டுமானால் அல்லது மோட்சம் பெற வேண்டுமானால் இறைவன் யாரை நமக்காக அனுப்பியிருக்கிறானோ அவரையே நாம் பின்பற்றியாக வேண்டும். அதை விடுத்து நாம் நம் இனத்துக்கு அல்லது நம் நாட்டுக்கு அல்லது நம் மொழிக்கு அனுப்பப்பட்ட தூதரையோ அல்லது வேதத்தையோ மட்டுமே பின்பற்றுவோம் என்று பிரிவினை வாதம் பேசினால் நஷ்டம் நமக்குத்தான். அதுவும் சாதாரண நஷ்டம் அல்ல - நிரந்தர நரகம் அது!

இன்று நமக்காக அனுப்பப்பட்ட இறைத்தூதர் முஹம்மது நபி அவர்கள் தான் என்பதற்கு ஆதாரமாக ஒரு சில தகவல்களை முன் உங்கள் பகுத்தறிவு கொண்டு ஆராய்வதற்காக முன்வைக்கிறோம்:

முஹம்மது நபி அவர்களுக்கும் அவருக்கு முன் வந்து சென்ற இறைத்தூதர்களுக்கும் இடையே நாம் கண்கூடாக காணக்கூடிய ஒரு சில வேறுபாடுகளை நாம் சற்று ஆராய்ந்தாலே இன்றைய காலகட்டத்துக்காக அனுப்பப்பட்டவர் இவர்தான் என்ற முடிவுக்கு வந்து விடுவோம்:

## 1.அகில உலகுக்கும் பொதுவான இறைத்தூதர்.

முந்தைய இறைத்தூதர்கள் அனைவரும் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் மற்றும் ஒரு குறிப்பிட்ட நாடுகளுக்காகவோ அல்லது ஒரு குறிப்பிட்ட சமுதாயங்களுக்காகவோ அனுப்பட்டிருந்தார்கள். உதாரணமாக,

- **7:65 இன்னும், ஆது கூட்டத்தாரிடம் அவர்களுடைய சகோதரர் ஹூதை (நபியாக அனுப்பி வைத்தோம்,)**

- **7:85 மத்யன் நகரவாசிகளிடம் அவர்களுடைய சகோதரராகிய ஷுஐபை (நம் தூதராக அனுப்பிவைத்தோம்)**

தூதர்கள் வரிசையில் முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்கு முன் வந்து சென்றவர் ஏசு என்றழைக்கப்படும் ஈஸா (அலை) அவர்கள். அவரும் ஒரு குறிப்பிட்ட சமூகத்தை நோக்கித்தான் அனுப்பப் பட்டு இருந்தார்.

- **43:59 அவர் (ஈஸா நம்முடைய) அடியாரே அன்றி வேறில்லை. அவருக்கு நாம் அருட்கொடையைச் சொரிந்து இஸ்ராயீலின் சந்ததியாருக்கு அவரை நல்லுதாரணமாக ஆக்கினோம்.**

ஏசுவும் இஸ்ராயீலின் மக்களை நோக்கி தனக்குப் பிறகு வரவிருக்கும் முஹம்மது நபியைப் பற்றி முன்னறிவிப்பும் செய்தார்கள்:

- **61:6 மேலும், மர்யமின் குமாரர் ஈஸா: “இஸ்ராயீல் மக்களே! எனக்கு முன்னுள்ள தவ்ராத்தை மெய்ப்பிப்பவனாகவும் எனக்குப் பின்னர் வரவிருக்கும் “அஹமது” என்னும் பெயருடைய தூதரைப் பற்றி நன்மாராயம் கூறுபவனாகவும் ,ருக்கும் நிலையில் அல்லாஹ்வின் தூதனாக உங்களிடம்**

**வந்துள்ளேன்" என்று கூறிய வேளையை (நபியே! நீர் நினைவு கூர்வீராக!)..**

ஆனால் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் இறுதி இறைத்தூதராகவும் உலகம் முழுமைக்கும் பொதுவானவராகவும் அனுப்பப்பட்டார்கள். நாம் இன்று இவ்வுலகின் இறுதி காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

● **7:158 (நபியே!) நீர் கூறுவீராக: "மனிதர்களே! மெய்யாக நான் உங்கள் அனைவருக்கும் அல்லாஹ்வின் தூதராக இருக்கிறேன், வானங்கள், பூமி ஆகியவற்றின் ஆட்சி அவனுக்கே உரியது, அவனைத்தவிர (வணக்கத்திற்குரிய) நாயன் வேறுயாருமில்லை -**

அன்றும் இன்றும் உள்ள தகவல் தொடர்பு வசதிகளை ஒப்பிட்டுப் பார்த்தாலே இந்த உண்மையை நாம் விளங்கிக் கொள்ள முடியும். அன்று ஊர்களுக்கும் நாடுகளுக்கும் இடையே தகவல் தொடர்பு இல்லாத நிலையில் வெவ்வேறு நாடுகளுக்கு வெவ்வேறு தூதர்கள் அனுப்பபட்டிருந்தனர். இன்றைய காலகட்டம் தகவல் தொடர்பு மிக விரிவடைந்த கால கட்டம். இப்படிப்பட்ட சூழலில் இறுதி இறைத்தூதர் உலகம் முழுமைக்கும் பொதுவானவராக அனுப்பப் பட்டார்கள்.. இவருக்குப் பிறகு எந்த இறைத்தூதரும் வரப்போவதில்லை. இனி உலகம் அழியும் நாள் வரையும் இவர்தான் இறைவனின் தூதர்.

## 2. வேதம் அழியாமல் பாதுகாக்கப்படுதல்

முந்தைய இறைத்தூதர்கள் மூலம் அனுப்பப்பட்ட வேதங்கள் பிற்கால மக்களால் கூட்டப்படவோ குறைக்கப்படவோ செய்யப்பட்டுள்ளன. அருளப்பட்ட காலத்தில் கலப்படமின்றி தூய்மையான நிலையில் இருந்த அவ்வேதங்கள் இன்று மனித கரங்களால் மாசுபடுத்தப்பட்ட நிலையில் காணப் படுகின்றன. அதுவும் அவற்றின் மொழிபெயர்ப்புகளைத்தான் நாம் காண முடிகிறதே தவிர அவற்றின் மூல மொழி வசனங்களை நாம் எங்கும் காண முடிவதில்லை. அதுமட்டுமல்ல, அவை அருளப்பட்ட மொழிகளே இன்று பேச்சுவழக்கில் இல்லை என்பதெல்லாம் நிதர்சனமான உண்மைகள்.

ஆனால் இறுதித் தூதர் மூலமாக அனுப்பப்பட்ட திருக்குர்ஆன் பதினான்கு நூற்றாண்டுகள் கடந்தும் எந்த விதமான மாற்றங்களுக்கும் இரையாகாமல் அருளப்பட்ட மொழியிலேயே அட்சரம் பிசகாமல் அப்படியே உலகின் எல்லா மூலைகளிலும் கிடைக்கிறது என்பது யாவரும் அறிந்த உண்மை. (திருக்குர்ஆன் அட்சரம் பிசகாமல் பாதுகாக்கப்படுகிறது என்பதற்கான ஆதாரத்தை இறுதி உள் அட்டையில் காண்க)

திருக்குர்ஆனுக்கு முன்னர் வந்த இறைவேதங்களின் இன்றைய நிலையை சற்று ஆராய்ந்தால் உங்களுக்கு உண்மை விளங்கிவிடும். அவற்றிலும் திண்ணமாக இறைவசனங்கள் உள்ளன. ஆனால் அவற்றுடன் இறைத்தூதர்களின் வார்த்தைகளும் அவர்களுக்கு பின்னர் வந்த மனிதர்களின் கூற்றுக்களும் இறைத்தூதர்கள் பற்றிய சரித்திர பதிவுகளும் கலந்து காணப்படுகின்றன. அதனால் அவற்றை 100 சதவிகிதம் இறைவாக்குகள் என்று சொல்ல முடிவதில்லை. ஆனால் திருக்குர்ஆனின் நிலை இவ்விஷயத்தில் தனித்து விளங்குகிறது. அதில் பதிவாகியள்ளவை 100 சதவிகிதமும் இறைவாக்குகளே. இந்த வேதத்தில் நபிகள் நாயகத்தின்

வார்த்தைகளோ மற்ற மனிதர்களின் வார்த்தைகளோ கலக்கவில்லை. எவ்வாறு எனில் நபிகள் நாயகம் அவர்களின் கூற்று மற்றும் அவர் செய்த செயல்கள் பற்றிய செய்திகள் ஹதீஸ் எனப்படும் நூல்களாக தனித்து தொகுக்கப் பட்டுள்ளன. இவை இறைவாக்குகளோடு கலக்கவில்லை. அரபி இலக்கியத்தில் திருக்குர்ஆனும் ஹதீஸும் வெவ்வேறு இலக்கியத்தரத்தைச் சேர்ந்தவையாக உள்ளன. இரண்டும் ஒன்றோடு ஒன்று கலவாமல் தனித்தனியாகவே விளங்குகின்றன.

## 3. இவரை வணங்குவோர் இல்லை

இறுதித் தூதருக்கு முன்னர் வந்த இறைத்தூதர்களை அவர்களது மறைவுக்குப் பின்னர் அவர்களுக்காக நினைவுச் சின்னங்கள் என்ற பெயரில் உருவப்படங்களையும் சிலைகளையும் உருவாக்கி பின்னர் அவற்றையே கடவுளாக பாவித்து மக்கள் வழிபாடு செய்யத் துவங்கினர். இதற்கு இறுதித் தூதருக்கு முன் வந்த ஏசுநாதரும் விலக்கல்ல. அவருக்கும் இன்று மக்கள் படம் வைத்து சிலை வைத்து வழிபடுவதை நாம் காண்கிறோம். ஆனால் இறுதித் தூதர் முஹம்மது நபி அவர்கள் வந்து சென்ற பின் 14நூற்றாண்டுகள் ஆகியும் இப்பூமியின் மேற்பரப்பின் மீது எங்காவது அவருடைய உருவப்படத்தையோ சிலையையோ பார்த்திருக்கிறீர்களா? இன்று அவரை உயிருக்குயிராக நேசித்து அவரை முன்மாதிரியாக பின்பற்றுவோர் கோடிக்கணக்கில் உலகெங்கும் இருந்தும் எங்குமே அவரது உருவப்படத்தைக் காணமுடியவில்லை என்றால் என்ன பொருள்.? அவர் போதித்த ஓரிறைக் கொள்கை மக்களால் பின்பற்றப்பட்டு வருகிறது என்பதைத்தானே அது காட்டுகிறது? படைத்தவன் மட்டுமே வணக்கத்துக்கு உரியவன் என்ற அவரது கொள்கை முழக்கம் இன்றும் ஓங்கி ஒலிக்கிறது என்பதைத் தானே காட்டுகிறது!

## சுயமரியாதைக்கு இலக்கணம்

அவர் தனது மரணப் படுக்கையில் இருக்கும் போதும் மக்களை நோக்கி, "மக்களே! எனது மரணத்துக்குப் பின் எனது சமாதியை விழா நடக்கும் இடமாக மாற்றி விடாதீர்கள். ஏனெனில் முந்தைய இறைத்தூதர்கள் விஷயத்தில் மக்கள் அவ்வாறு செய்து அவர்களை கடவுள்களாக்கி விட்டது போல் என்னைக் கடவுளாக்கி விடாதீர்கள்" என்று எச்சரித்தார்.

இன்றும் அவரது சமாதி சவுதி அராபியாவில் மதீனா நகரில் உள்ளதை அறிவீர்கள். ஆனால் யாரும் அங்கு சென்று "நபிகள் நாயகமே, எனக்கு இதைக் கொடுங்கள் அல்லது அதைக் கொடுங்கள்" என்று பிரார்த்திப்பதை நீங்கள் பார்க்க முடியாது.

அவரது வாழ்நாளில் கூட அவருக்கு மரியாதை செய்யும் நிமித்தமாக காலில் விழப் போனவர்களை மட்டுமல்ல, தனக்காக பிறர் எழுந்து நிற்பதைக் கூட அவர்கள் தடை செய்தார்கள். "யாருக்கேனும் தனக்காக பிறர் எழுந்து நின்று மரியாத செய்வது சந்தோஷத்தை அளிக்குமானால் அவர் செல்லுமிடம் நரகம் என்பதை அறிந்து கொள்ளட்டும்" என்று மக்களுக்கு உபதேசித்து சுயமரியாதைக்கு இலக்கணம் வகுத்துச் சென்றார்.


## 4.வாழ்க்கை முன்மாதிரி


இறைத்தூதர்கள் அனைவரும் எந்த மக்களுக்காக அனுப்பப்பட்டார்களோ அந்த மக்களுக்கு வாழ்க்கை முன்மாதிரிகளாகத் திகழ்ந்தார்கள். முந்தைய இறைத்தூதர்களின் வாழ்க்கை வரலாறுகள் அல்லது வாழ்க்கை முன்மாதிரிகள் முறைப்படி பதிவு செய்யப்படாத நிலையை நாம் இன்று காண்கிறோம். இறுதித்தூதர் முஹம்மது நபியவர்கள் இறுதி நாள் வரை இப்பூமியில் வாழப் போகும் அனைத்து மனிதர்களுக்கும் முன்மாதிரியாக அனுப்பப்பட்டவர்கள். அதற்கேற்றவாறு அவருடைய நபித்துவ வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டங்களும் அவரது தோழர்களாலும் அன்னாரது துணைவியர்களாலும் அறிவிக்கப் பட்டு அவை பரிசோதிக்கப் பட்டு மிக நேர்த்தியாக பதிவு செய்யப் பட்டிருப்பதைக் காண்கிறோம். இப்பதிவுகளுக்கு ஹதீஸ்கள் என்று கூறப்படும். இவ்வுலகில் வாழ்ந்த எந்த தலைவருடையதும் அல்லது எந்த மதகுருமார்களுடையதும் அல்லது வரலாற்று நாயகர்களுடையதும் வரலாறு இவ்வளவு நுணுக்கமாக மற்றும் ஆதார பூர்வமாக பதிவுசெய்யப் பட்டதில்லை. மனித வாழ்வோடு சம்பந்தப் பட்ட எல்லா துறைகளுக்கும் அவருடைய வாழ்விலிருந்து அழகிய முன்மாதிரியைக் காணமுடிகிறது. உதாரணமாக அவரை பணியாளாக, எஜமானனாக, வியாபாரியாக சாதாரண குடிமகனாக, போர் வீரராக, படைத்தளபதியாக, ஜனாதிபதியாக, ஆன்மீகத் தலைவராக, கணவராக, தந்தையாக, அவரது வாழ்நாளில் கண்டவர்கள் எடுத்துக் கூறும் செய்திகளின் தொகுப்புதான் ஹதீஸ்கள் என்பவை. அவரது வீட்டுக்கு உள்ளே வாழ்ந்த வாழ்க்கையும் வெளியே வாழ்ந்த வாழ்க்கையும் என அனைத்துமே அங்கு பதிவாகின்றன. அவர் கூறிய வார்த்தைகள், அவர் செய்த செயல்கள், பிறர் செய்யக் கண்டு அவர் அங்கீகரித்த செயல்கள் என அனைத்தும் இன்று இஸ்லாமிய சட்டங்களுக்கு அடிப்படையாகின்றன.

### பிரதிபலிக்கும் முன்மாதிரி வாழ்க்கை வரலாறு

அன்னாரது வரலாற்றின் இன்னொரு அற்புதம் அவரது வாழ்க்கை வரலாறு ஏடுகளில் மட்டுமல்ல, எண்ணங்களில் மட்டுமல்ல, அவரைப் பின்பற்றி வாழ்ந்த மற்றும் இன்று வாழ்ந்து கொண்டிருக்கின்ற கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கையில் பிரதிபலிப்பதைக் காண முடிகிறது என்பது! அன்று அவரிட்ட கட்டளைகள் இன்றும் மீறப் படாமல் பின்பற்றப் படுகின்றன என்பது மட்டுமல்ல. அவரது அன்றாடப் பழக்க வழக்கங்களை அறிந்து அதைப் போலவே தம் வாழ்வை அமைக்கத் துடிக்கும் மக்கள் கோடி, கோடி! உதாரணமாக அவர் தொழுகையில் எவ்வாறு நின்றார், அமர்ந்தார், எவ்வாறு உணவு உண்டார், என்பதை அறிந்து அதைப் போலவே வாழையடி வாழையாக கடைப் பிடிப்பவர்கள் முஸ்லிம்கள். அன்று அவர் தாடி வைத்திருந்தார், இன்று கோடிக்கணக்கான மக்கள் முகத்தில் அதைக் காணமுடிகிறது! ஏனெனில் இறைவனே அவரைப் பற்றி கூறுகிறான் இவ்வாறு:

- **33:21 அல்லாஹ்வின் மீதும் இறுதி நாளின் மீதும் ஆதரவு வைத்து, அல்லாஹ்வை அதிகம் தியானிப்போருக்கு நிச்சயமாக அல்லாஹ்வின் தூதரிடம் ஓர் அழகிய முன்மாதிரி உங்களுக்கு இருக்கிறது.**


اللَّهِ مَن يَهْدِ اللَّهُ فَهُوَ الْمُهْتَدِ وَمَن يُضْلِلْ
فَلَن تَجِدَ لَهُ وَلِيًّا مُّرْشِدًا ﴿١٧﴾ وَتَحْسَبُهُمْ أَيْقَاظًا
وَهُمْ رُقُودٌ وَنُقَلِّبُهُمْ ذَاتَ الْيَمِينِ وَذَاتَ
الشِّمَالِ وَكَلْبُهُم بَاسِطٌ ذِرَاعَيْهِ بِالْوَصِيدِ
لَوِ اطَّلَعْتَ عَلَيْهِمْ لَوَلَّيْتَ مِنْهُمْ فِرَارًا وَ
لَمُلِئْتَ مِنْهُمْ رُعْبًا ﴿١٨﴾ وَكَذَٰلِكَ بَعَثْنَاهُمْ لِيَتَسَاءَ
لُوا بَيْنَهُمْ قَالَ قَائِلٌ مِّنْهُمْ كَمْ لَبِثْتُمْ قَالُوا لَبِثْنَا
يَوْمًا أَوْ بَعْضَ يَوْمٍ قَالُوا رَبُّكُمْ أَعْلَمُ بِمَا
لَبِثْتُمْ فَابْعَثُوا أَحَدَكُم بِوَرِقِكُمْ هَٰذِهِ
إِلَى الْمَدِينَةِ فَلْيَنظُرْ أَيُّهَا أَزْكَىٰ طَعَامًا
فَلْيَأْتِكُم بِرِزْقٍ مِّنْهُ وَلْيَتَلَطَّفْ وَلَا يُشْعِرَنَّ
بِكُمْ أَحَدًا ﴿١٩﴾ إِنَّهُمْ إِن يَظْهَرُوا عَلَيْكُمْ



# மனித மனங்களில் பாதுகாக்கப்படும் பெட்டகம்

கடந்த வருடம் பர்மிங்காம் பல்கலைக்கழகத்தில் பாதுகாக்கப்பட்டு இருந்த திருக்குர்ஆன் கையெழுத்துப் பிரதிகளை ரேடியோ கார்பன் பரிசோதனைக்கு உட்படுத்திய ஆராய்ச்சியாளர்கள், இது கி.பி. 568 மற்றும் 645-க்கு இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டிருக்கும் என 95.4 சதவீதம் அளவுக்கு துல்லியமாக கணித்துள்ளனர்.


(ஆதாரம்: http://www.birmingham.ac.uk/news/latest/2015/07/quran-manuscript-22-07-15.aspx)

மேலே படத்தில வலது பக்கத்தில் உள்ள அந்த கையெழுத்துப் பிரதிக்குப் பக்கத்தில் இருப்பது இன்றைய கம்ப்யூட்டர் பிரதி. இரண்டும் அட்சரம் பிசகாமல் அப்படியே இருப்பதைக் காணலாம். உலகில் எந்த நாட்டில் எந்த மூலையில் இருந்து முஸ்லிம்களின் பயன்பாட்டில் உள்ள ஒரு குர்ஆன் பிரதியை எடுத்து பரிசோதித்தாலும் இதே ஒற்றுமையை நீங்கள் காணமுடியும்.

உலகெங்கும் உள்ள இஸ்லாமியர்களைப் பொறுத்தவரை இது ஆச்சரியத்துக்குரிய ஒரு செய்தி அல்ல என்ற கூறலாம். ஏனெனில் அருளப்பட்ட காலம் முதல் இது இன்றுவரை திருக்குர்ஆனை மூல மொழியில் ஓதிவருவது அவர்களின் பழக்கமாக உள்ளது. ஒலிவடிவிலேயே முழுக் குர்ஆனும் உலகெங்கும் பிரபலமாகி இருப்பதால் அதை யாரும் சிதைக்க முடியாது என்பதை அவர்கள் உணர்ந்துள்ளார்கள்.

இனி இறுதிநாள் வரை உலகில் தோன்ற இருக்கும் அனைத்து மனிதர்களுக்கும் இதுவே நேர்வழியை அறிவதற்கான வழிகாட்டு நூலாக இருப்பதால் இதன் பாதுகாப்பை இறைவனே ஏற்றேடுத்துள்ளதாக அவன் குர்ஆனில் குறிப்பிடுகிறான்:

● **“நிச்சயமாக நாமே இந்த நினைவூட்டலை (குர்ஆனை) இறக்கியிருக்கிறோம். நிச்சயமாக நாமே இதைப் பாதுகாப்போம்”(திருக்குர்ஆன் 15:9)**


عَلَيْهِم مَّسْجِدًا ﴿٢١﴾ سَيَقُولُونَ ثَلَاثَةٌ رَّابِعُهُمْ
كَلْبُهُمْ وَيَقُولُونَ خَمْسَةٌ سَادِسُهُمْ كَلْبُهُمْ
رَجْمًا بِالْغَيْبِ وَيَقُولُونَ سَبْعَةٌ وَثَامِنُهُمْ
كَلْبُهُمْ قُل رَّبِّي أَعْلَمُ بِعِدَّتِهِم مَّا يَعْلَمُهُمْ
إِلَّا قَلِيلٌ فَلَا تُمَارِ فِيهِمْ إِلَّا مِرَاءً ظَاهِرًا وَلَا
تَسْتَفْتِ فِيهِم مِّنْهُمْ أَحَدًا ﴿٢٢﴾ وَلَا تَقُولَنَّ



From
**House of Peace**
PO Box No. 1726
Bangalore 560 017

Registered news paper in India No. KARTAM/2007/28173
Registered under Postal Regn. No. KRNA/BGE/1057/2018-2020
Posted at BANGALORE PSO, Mysore Road , Bangalore 560026 on 25th or 26th or 27th of every month. No. of Pages: 24+4
Licenced to post without prepayment . License No. WPP-308
Date of Publication: 25th of every month

**(PRINTED MATTER)**

To

.....................................................................

.....................................................................

.....................................................................

.....................................................................

## பாரெங்கும் பரவி நிற்கும் அணிவகுப்பு!

